திராவிடன்

ஆசிரியர்: என்.வி.என்

அறிஞர் அண்ணா வாழியரே!



வானைப் போன்ற அறிவாற்றல்
வாய்த்தோன்! அருங்குணம் வாய்த்தோனும்!
தேனைப் பாய்ச்சும் செஞ்சொல்லான்!
தெருண்டவர் வியக்கும் பேச்சழகன்
ஊனை உயிரை நல்லுணர்வை
ஊக்கும் தென்றற் பூங்காற்று!
ஆணே றழகன் எம்அண்ணா!
அறிஞர் அண்ணா வாழியரே!

இருளைப் போக்க உலகினிலே
எழுந்து தொடுவோன் இளம்பரிதி!
உருளும் இடியென முழங்கிடுவோன்!
ஊருக் குழைக்கும் பாட்டாளி!
வெருளும் நுகத்துக் காளைகளை
மெல்ல அடக்கும் நல்லுழவன்!
அருளும் குணத்தோன் எம்அண்ணா!
அறிஞர் அண்ணா வாழியரே!

மக்கள் போற்றும் இளவேனில்!
மாணவர் கற்கும் தொகைப்பாடல்!
சுக்குத் திப்பிலி மிளகென்னும்
துயரைப் போக்கும் மாமருந்து.
திக்கு புகழ்சேர் திராவிடத்தின்
வீரன்! விடுதலைப் போர்த்தலைவன்!
மக்கள் தலைவன் எம்அண்ணா!
அறிஞர் அண்ணா வாழியரே!

ஏழை செல்வன் இல்லாத
இன்பத் திராவிட நாட்டைய
வாழ்வை இளமை முதற்கொண்டே
வகுத்தோன்! தம்பியர் தொகுத்தோனும்!
சூழும் கடலார் திராவிடத்துத்
துணைவன்! விடுதலைப் படைத்தலைவன்!
வாழ்க அண்ணா! எம் அண்ணா!
அறிஞர் அண்ணா வாழியரே!

—கவிஞர். வாணிதாசன்

25 காசு **சிறப்பிதழ்**

அண்ணு வழங்கிய அரசியல்நெறி

ஏழை—நடுத்தர மக்களின் இல்லங்களிலும் அவர்களின் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்றுள்ள நமது அருமை அண்ணு அவர்களின் பிறந்தநாள் விழா நாடெங்கும் கொண்டாடப்படுவதைக் கண்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்ருேம்.

அறிஞர் அண்ணு அவர்களின் பொதுவாழ்வு, பாட்டாளி மக்களின் துயர்துடைக்கும் தொழிற்சங்கத் துறையிலிருந்தும், மக்களின் வாழ்வைச் செல்லரித்துவந்த மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும் பகுத்தறிவியக்கத்திலிருந்தும் துவங்கப்பெற்றதாகும். தமது கல்வித்துறையை இனிதே முடித்துக்கொண்டு, அரசியல் துறையில் ஈடுபாடு கொண்ட அன்றைய நாளிலிருந்து இன்றுவரை, தாம் மேற்கொண்ட கொள்கை கோட்பாடுகளிலிருந்து சிறிதும் தடம்புரளாமல், உறுதிப்பாடுடன் பணியாற்றிவரும் தூய்மையாளராக அறிஞர் அண்ணு அவர்கள் விளங்கி வருகிருர்களென்று கூறிஞல் மிகையாகாது.

எவ்வளவோ எதிர்ப்புகளையும், அரசியலாரின் அடக்குமுறைகளையும், வாழ்க்கைத் தொல்லைகளையும், அதுமட்டுமல்லாமல் அண்ணு அவர்கள் யாரை அவரது ஒரே தலைவராக இதயபூர்வமாகக் கருதி அதை நடைமுறையிலும் கடை பிடித்து வந்தாரோ அந்தத் தலைவரின் தாக்குதலையும், தாங்கிக்கொண்டு தமது பொது வாழ்வில் சிறந்து விளங்கி வருகிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கும் மக்களிடம் கழகம் பெற்றுள்ள பேராதரவுக்கும் முக்கிய காரணமாய் அமையப்பெற்றிருப்பது அறிஞர் அண்ணு அவர்களின் இச்சீரிய பண்புகளேயாகும்.

அரசியல் உலகில் கட்சிப் பிரதிகட்சிகளுக்கிடையே—கட்சித் தோழர்களுக்கிடையே நிலவிவந்த விரோத மனப்பான்மையை முறியடித்து, தமது கொள்கையில் எவ்வளவு உறுதியையும் கண்டிப்பையும் காட்டி வந்தாலும் அதற்காக மாற்றுக் கட்சியினரை விரோதிகளாகக் கருதாமல்; நண்பர்களாகப் பாவித்து, அந்த அரசியல் நெறியை அரசியல் உலகிற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு அளித்த பெருமை—அண்ணு அவர்களுக்கே உரித்தானது என்பதை மாற்றுக்கட்சியினரும் ஒப்புக்கொள்வார்கள்.

தலைசிறந்த அரசியல் மேதைகளின் பாராட்டுதல்களிலிருந்து பாட்டாளித் தோழர்களின் இதயபூர்வமான வாழ்த்துக்கள் வரை அறிஞர் அண்ணு அவர்கள் பெற்றிருக்கிருர்கள் என்ருலும் அண்ணு அவர்கள் அதற்காக நிமிர்ந்து பார்த்ததில்லை. அவர்களது தலைமைக்கும் அறிவாற்றலுக்கும் நாட்டில் பேராதரவு பெருகப் பெருக அண்ணு அவர்களிடம் எளிமையும் அதே சமயத்தில் கடமை உணர்ச்சியும் சிறப்புற்ருேங்கி வளர்ந்து வருகிறது.

கழகத் தோழர்கள் அண்ணு அவர்களை கழகத்தின் வழிகாட்டி என்று குறிப்பிட்டுச் சொல்லும்போது அண்ணு அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனுல் அவரது அரசியல் பண்பும் அவரால் கடைப்பிடித்து வரப்படும் அரசியல் நெறியும் கழகத் தோழர்களுக்கு மட்டுமல்ல, பொதுப்பணியில் ஈடுபாடு கொண்ட அனைவருக்குமே வழிகாட்டியாக அமையப் பெற்றிருக்கிறது என்பதை அரசியல் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அண்ணு அவர்களைப்பற்றி, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டுப் பேசுகையில், "தமிழ்நாட்டின் அரசியல் துறையில் எனது ஆருயிர் நண்பர் ஈ. வெ. இராமசாமி நாயகர் அவர்களுக்கும், அவரது அருமை மாணவராக விளங்கிவரும் அண்ணுத்துரை அவர்களுக்கும் அவரைச் சார்ந்த தோழர்களுக்கும் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் விரைவில் அகல வேண்டுமென்று அவாவுறுகிறேன். ஆனுல் எனது எண்ணம் ஈடேருவிட்டால், தமிழன்னையின் தன்மானத்தைக் காக்கும் ஆற்றல்மிக்க தலைவனுகப் பாட்டாளி மக்களின் வாழ்வு வெற்றியுறும் ஆட்சிமுறையை அமைக்கும் அருஞ்செயல் வீரனுக எதிர்காலத்தில் தோழர் அண்ணுத்துரை சிறந்து விளங்குவார்"

—என்று அவரது இறுதிகாலத்தில் தெரிவித்த உயிரோட்டமுள்ள கருத்துக்கள் விரைவில் நடைமுறைக்கு வரும் சூழ்நிலை உருவாகி வருவதை தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிருர்கள் என்பதை காலம் சுட்டிக்காட்டி வருகிறது.

பண்டித நேருவின் பிறந்த நாள் குழந்தை வாரமாகவும், குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை ஆசிரியர் நாளாகவும் கொண்டாடப்படுவது எவ்வாறு பொருத்தமுடையதாயிருக்கிறதோ அதுபோலவே அருமை அண்ணு அவர்கள் தமது பொதுவாழ்வில் பெரும் பகுதியை இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிவதில் ஈடுபடுத்திவருவதால், அண்ணு அவர்களின் பிறந்த நாளை இந்தி எதிர்ப்பு வாரமாகக் கொண்டாடுவது பொருத்தமுடையதாகும்.

அறிஞர் அண்ணு அவர்களின் சிறந்த தொண்டு நாட்டுக்கும், அவரது தூய்மையான தலைமை கழகத்திற்கும் கிடைக்கிறதென்ருல், அவர் தட்டுத் தடங்கலின்றி அப்பணிகளில் ஈடுபட்டுவருகிருர்களென்ருல் மதிப்பிற்குரிய இராணி அண்ணி அவர்கள் புரியும் துணையும் முக்கிய காரணமாகும். எனவே அருமை அண்ணு அவர்களும், இராணி அண்ணியார் அவர்களும் அவர்களது குடும்பமும் நீடூழி வாழவேண்டுமென்று இதயபூர்வமாக வாழ்த்துகின்ருேம்.

அதேபோல அண்ணு அவர்களின் வழியைப் பின்பற்றி இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய அரசியலாரின் அடக்குமுறைகளுக்கு ஆளாகி சிறைத் தண்டனைபெற்றுள்ள கழக முன்னணித் தோழர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், நாம் நமது பணிவன்பான வணக்கத்தையும் வாழ்த்தையும் கூறவேண்டியது கடமையாகும்.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி நாள்தோறும் வளர்ந்துவருகிறது. அறிஞர் அண்ணுவின் பொதுப் பணியில் இரண்டறக் கலந்துவிட்டது. இதற்காக நமது கழகக் கண்மணிகள் தமது இன்னுயிரையே தியாகம் செய்துள்ளனர். ஆதலின் இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் அடிப்படையில் நாம் நமது கழகப் பணியினை இனிதே நிறைவேற்றுவோம் என்று உறுதி எடுத்துக்கொண்டு அதேபோல செயல்படுவதே நாம் அண்ணு அவர்களுக்குச் செலுத்தும் அன்புக் காணிக்கையாகும்.

அந்தக் காணிக்கையை அருமை அண்ணு அவர்களுக்கு 'திராவிடன்' சார்பிலும் என் சார்பிலும் பணிவன்புடன் செலுத்துகின்றேன்.

கழகத்தோழர்களே! நமது தனிப்பெருந் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் வகுத்துத்தந்த கொள்கை வழியில் உறுதியுடன் நிற்போம், தோழமை உணர்வுடன் கடமையாற்றுவோம். இறுதியாக வெற்றி பெறுவோம். வாரீர், வாரீர், நம் வழிகாட்டியின் பிறந்த நாளை படாடோபமின்றி கழகத்திற்கே உரித்தான அரசியல் அறிவுடைமையுடன் நாடெங்கும் கொண்டாடுவோம்!

வாழ்க அண்ணு!

வெல்க அறப்போர்!!

அமைக நல்லாட்சி!!!

○

என். வி. நடராசன்



நடமாடும் குறள் நமது அண்ணன்!

கோவை. க. இரத்தினம்

குறளைப்போன்ற சிறிய உருவம்—அவர்தான் நம் அண்ணா!

குறள் எளிமையானது; நம் அண்ணனும் அப்படித்தான்! காட்சிக்கு எளியவர்; கடுஞ்சொல் அல்லாதவர்! குறளின் இனிய கருத்துக்களைப்போல எவரிடமும் இனிமையோடு பழகக் கூடியவர். மாற்றாராலும், நம்மையே தூற்றித் திரிவோராலும் ஏற்றியே பேசுவார் நம் அண்ணா! ஏனெனில் அவர் இதயம் அப்படிப்பட்டது! அது அண்ணனின் தனிச்சிறப்பு!

கள்ளமில்லாத வெள்ளை உள்ளத்தார்; இத்தனை பெரிய அறிஞருக்கு இப்படி ஒரு குழந்தை உள்ளமா? எனப் பலர் எண்ணி வியப்பதுண்டு!

இந்த நூலில் இல்லாததொன்றில்லை என எண்ணும்படி திருக்குறள் புகழப்படுகிறது. அதைப் போலவே இன்று நம் அண்ணனும் புகழப்படுகிறார்! கலையா? இலக்கியமா? அரசியலா? பொருளாதாரமா?—எந்தத் துறையாயினும் சரி; அண்ணனைப்போல் அறிந்து வைத்திருப்பவர் எவருமில்லை.

தமிழ் இனம் இன்று எங்கெங்கு வாழுகிறதோ அங்கெல்லாம்—கடல் கடந்த நாடுகளிலும் இக் கன்னித் தமிழகத்து அறிஞனைப் போற்றுகின்றனர்! புகழ்பாடுகின்றனர் !!

குறளின் பெருமை குவலயம் உள்ளவரை அழியாது-அதைப் போலத்தான் நம் அண்ணாவின் பெயரும் நிலைத்து நிற்கும்!

எவருக்கும் இல்லாத ஏற்றமிகு சிறப்பு—புகழ் இவருக்கு மட்டும் ஏன்? எத்தனை கோடி மனிதர் வாழுகின்றார் இந்த உலகில்? எல்லோரும் போற்றப்படுகிறார்களா? காலத்தை வென்றவர் எத்தனை பேர்? இஞ்ஞாலத்தில் நின்றவர் எத்தனை பேர்? எங்கோ ஓரிருவர்! விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அந்த மனித மேதைகளில் உதயசூரியனாய் ஒளிவிடுகிறார் நம் அண்ணா!

உலகில் மனிதன் பிறக்கிறான்; எப்படியோ வாழுகிறான்; எங்கோ இறந்து போகிறான், இதுதான் மனித வாழ்க்கையா? இதுதான் மனிதன் கடமையா? 'அல்ல' என்கிறார் அண்ணா! மனிதன் மனிதனுக்காக வாழவேண்டும். தன்னைப் பெற்றெடுத்த நாட்டுக்கும், அன்னை மொழிக்கும் அருந்தொண்டாற்றுவது உன் கடமை என்று நாட்டவர் இதயத்தில் பொதுநல ஆர்வத்தை மூட்டினார்!

பிறரின் குருதியைச் சுவைத்து வாழ்வதல்ல மனித வாழ்க்கை! பிறருக்காக இடர்படுவதில்—துயர் ஏற்பதில்தான் இன்ப வாழ்க்கையே அமைந்திருக்கிறது என்ற தியாக உணர்வை நமக்கு ஊட்டினார்!

அவரது உழைப்பால் நாடு ஒளி பெற்றது! நாம் விழி பெற்றோம்! மக்கள் மகிழ்ந்தனர்! அவர்களை ஆட்டிப்படைத்துவந்த மடமை எங்கோ ஓடி மறைந்தது!

தமிழ் அழிந்தது—ஒழிந்தது என்று மகிழ்ந்து கிடந்த சில பிறவிகளுக்கு அண்ணாவின் பெயர் அபாயக்குறியாகிவிட்டது! நம் மொழிக்கு தனிச்சிறப்பை ஏற்படுத்திவிட்ட பெருமை அண்ணாவுக்கே உரியது!

ஏகபாரதம் பேசிவந்த எத்தர்களுக்கு அண்ணாவின் பேச்சு வெடிகுண்டாக இருந்தது!

ஏய்த்துப் பிழைப்போரும் ஏமாற்றி வாழ்வோரும் மக்கள் விழிப்பு கண்டு மனம் புழுங்கினர்!

அறம், பொருள், இன்பம் என்று கூறுகிறது குறள்! அரசியல், பொருளியல், சமுதாயவியல் இவைகளைப்பற்றித்தான் அண்ணாவும் கூறினார். சமுதாயத் துறையில் அவர் ஆற்றிய பணி மகத்தானது! தமிழ்ச் சமுதாயத்தின் புரட்சியுகம் அதைப்பற்றிச் சொல்லும்!!

'தொட்டதெல்லாம் பொன்' என்பார்களே அதைப்போல நம் அண்ணா எந்தத் துறையில் நுழைந்தாரோ அதிலெல்லாம் வெற்றிகண்டார். அவரது தீர்க்க தரிசனம் என்றுமே பொய்த்ததில்லை! மாற்றார் பொறாமையால் காயக்காய அண்ணா புன்னகையோடு தம் பணியைச் செய்து கொண்டிருப்பார்!

பொல்லாங்கு கூறுவோர்—பொறாமையால் காய்வோர் எந்நாளில் இல்லை இத்தமிழ் மண்ணில்? அதுதான் தமிழகத்தின் சாபக்கேடாயிற்றே! அண்ணனைப் போன்ற நல்லாரை மட்டுமா பெற்றாள் தமிழன்னை? அல்லாரையும் பெற்றிருக்கிறாளே!

இல்லையேல் ஆற்றல் மிகுந்த அந்த அறிவுலக மேதையின் பெருஞ்சிறப்பை மூடிமறைத்து விடச் சிலர் முனைந்துநிற்பார்களா? அதில் அவர்கள் இன்பம் காண்பார்களா?

நல்ல இதயம் படைத்தவர்கள், நாட்டு நலனிலே அக்கறை கொண்டவர்கள், தமிழன் புகழ் தரணியெங்கும் ஓங்கவேண்டும் என்று ஆசை கொண்டவர்கள் "அண்ணா வாழ்க!" என்று வாழ்த்துகின்றனர்! ஏன்? அவரால் பெருமையுறுகிறது தமிழினம்! அவரால் இனிமை பெறுகிறது நம் அருந்தமிழ்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ச் சமுதாயத்தில் ஓர் அறிஞன் பிறந்தார்—அவர்தான் திருவள்ளுவர்! அவருக்குப் பின் தமிழகம் இப்போதுதான் அப்படிப்பட்ட ஓர் பேரறிஞரை—நம் அண்ணாவைப் பெற்றிருக்கிறது!

அவர் பெருமை உணராத மூடமதியினர் என்றோ ஒரு நாள் திருந்துவர்; தம் செயலுக்கு வருந்துவர்!

தூற்றல் மொழிகளைக் கண்டு அஞ்சுபவர் அல்ல அண்ணா! ஏசல் மொழிகளையும் வாழ்த்தாக நினைப்பவர்தான் பொதுவாழ்வில் இருக்கத் தகுதி படைத்தவர்கள்! அண்ணாவோ, மாற்றார் எதிர்ப்புக்கு நடுவேயே வாழ்ந்தவர்; வாழ்பவர்! அவரது பொதுவாழ்வுத் தொடக்கம் முதல் இன்று வரை எதிர்ப்புக்களைத்தான் அதிகம் சந்தித்திருக்கிறார். எப்போதோ ஒரு முறை மலரும் அபூர்வ மலரைப் போலத்தான் வாழ்த்துக்கள் அவருக்குத் தூவப்பட்டு வந்திருக்கின்றன!

அண்ணா அவர்களின் பொது வாழ்வுப் பாதையில் பூ விரித்திருக்கவில்லை; கல்லும், முள்ளும்தான் நிரம்பிக்கிடந்தன! ஏனெனில் அண்ணா ஒரு மேனாமினுக்கி அரசியல் வாதியாக என்றுமே இருக்க விரும்பியதில்லை. மடமை நிறைந்த சமுதாயத்தையே அறுத்து 'ஆபரேஷன்' செய்யும் டாக்டராக—சமுதாய சீர்திருத்த வீரராகத் திகழ்ந்தார்.

அங்கு மல்லிகையின் மணம் வீசாது! பூ மாலைகள் விழாது!! புகழ் மொழிகள் கிடைக்காது!! அதைத் தெரிந்தேதான் அத்துறையில் அடியெடுத்துவைத்தார் அவர்.

கல்லும், முள்ளும் நிரம்பிய அந்தக் காட்டுப்பாதையில் நம்பிக்கை ஒன்றை மட்டுமே துணையாகக்கொண்டு நடந்தார் அண்ணா. பழமை வெறியர்களின் மிரட்டல்கள், மடமைவாதிகளின் அச்சுறுத்தல்கள், சமுதாய விரோதிகளின் தாக்குதல்கள் இத்தனையும் தாங்கிக்கொண்டு நடந்தார் அண்ணா!

அண்ணன் பிறந்த நாளான இன்று 'வாழ்க அண்ணா!' என்று வாய் நிறைய வாழ்த்துகிறோம் நாம். நாட்டு மக்களின் இந்த இதய வாழ்த்தைப்பெற அண்ணா அவர்கள் கொடுத்த விலை—செய்த தியாகம் கொஞ்சமா? அவரது வாழ்க்கைச் சுவடியைப் புரட்டினால் ஒவ்வொரு பக்கமும் நமக்கு ஓராயிரம் கதைகளைச் சொல்லும்!

அண்ணனின் வாழ்க்கை—அவர் கூறும் தத்துவங்கள்—காலத்தால் அழிக்க முடியாதவை! எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் அது! இன்று அவர் பின்னால் அணிவகுத்து நிற்கும் லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கை நிறைந்த முகங்கள் இதைத்தான் கூறி நிற்கின்றன!

எதிர்காலத் தமிழகத்தின் இதயம் அண்ணா! அவரது வாழ்க்கை பொதுவாழ்வில் அடியெடுத்து வைப்போருக்கு வழிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமேது?

வாழ்க அண்ணா!

வளர்க அவர்தம் புகழ்!!

○



தன்னலமில்லா தங்கச்சுடரோன்!

——[வேல்வேந்தன்]——

என்நாட்டின் ஒளிவிளக்கு; இனிமைப் பண்பன்
எவருக்கும் அஞ்சாத இதயங் கொண்டோன்
பன்னாளுந் திருநாட்டின் பாங்கிற் காக
பகலென்றும் இரவென்றும் பாரா துழைப்போன்;
மழைபோலே உரைபொழியும் மாண்பும்; அதிலும்
மணிபோன்ற சொல்கோர்க்குந் திறனும் வாய்ந்தோன்
உழைப்பதற் கயராத உள்ளம்; என்றும்
உண்மையினைக் கூறுதற் கஞ்சா நெஞ்சம்!
உச்சிமேல் புலவரெலாம் உவந்து போற்றும்
உரைக்கவிலா புகழ்கொண்ட ஒளிசேர் முத்து;
கச்சிநகர் கண்டெடுத்த கவினார் தங்கம்
கற்கண்டு தமிழ் போன்ற குணத்தின் குன்று!
ஈரோட்டுத் தந்தைக்கும் இசையைத் தந்தோன்
இருநாலே முகவையினைக் கண்டோ ரின்றும்
சீரோடுஞ் சிறப்போடுஞ் செழித்து வாழ்ந்த
செந்தமிழர் வாட்டத்தைத் துடைக்க முயல்வோன்
சீறிவரும் அரவமனை இந்தி தம்மால்
செந்தமிழுக் கிடரென்று நாட்டுக்குணர்த்தி
ஊறியுள்ள தமிழுணர்வை ஊக்க வந்தோன்
உண்மைக்குத் தலைவணங்கும் உள்ளம் வாய்ந்தோன்
பகைவர்க்கும் பனிமலரின் பார்வை தந்து
பாகுமொழி தன்னாலே ஈர்க்கும் வல்லோன்;
நகையாலே நன்றிகொன் றவரை வீழ்த்தி
நாணியவர் தன்தாளை வணங்கச் செய்வோன்
அயராது உழைப்பதிலே அலையுங் கடலோன்
அணுவளவுங் காய்ச்சொல்லைக் கொள்ளாப் பண்பன்
தயவினையே பிறரிடத்துத் தனக்காய் விழையா
தன்னலமின் றுழைக்கின்ற தங்கச் சுடரோன்!

நான் கண்ட அண்ணா

குட்டையான தோற்றம்; குறும்புத்தனமான, கனிவு மிகுந்த பார்வை; அறிவொளி வீசும் கண்கள்; அனுபவ முத்திரையைக் காட்டும் முகம், பரந்த எண்ணத்தைக் காட்டும் நெற்றி; இழந்த உரிமைகளை மீட்கத் துடிக்கும் மீசை! பகைவரிடமும் அன்பு காட்டும் உயர்ந்த இதயம்; ஓய்வில்லாது பணி புரியும் கால்கள். இவைகள் அனைத்தும் ஒருங்கே கூடிய உருவம்தான் இனிய உரை புகலும் ஏந்தல் அறிஞர் அண்ணா!

தமிழக—திராவிட அரசியலில் பங்கு பெற்று எத்தனையோ பேர் பெரும்புகழ் ஈட்டியுள்ளனர். ஆனால் தென்னகத்தில் அண்ணா பெற்றிருக்கும் பேரும், புகழும் யாரும் பெற்றதில்லை! காரணம்? அண்ணாவின் அறிவாற்றலும் அதோடு ஒன்றிய திறமையும், பயன் கருதாத் தொண்டும்தான்!

தலைவராக வேண்டுமென்ற பேராசையால் தன்னைத் துதிபாட ஒரு கூட்டத்தையே தயார் செய்துகொண்டு, வினாடிக்கொரு

நாகை. மருதவாணன்

'தத்துவ மேதைகள்' பிறக்கின்ற தமிழ்நாட்டில் மக்களாலேயே தலைவராக்கப்பட்ட மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா!

நீதிக்கட்சியில் தொடங்கி இன்றையத் தினம் வரை பொதுச் செயலாளராகப் பணியாற்றும் தொடர்ச்சி அண்ணாவின் நிர்வாகத் திறமைக்குச் சான்றாகும்.

பாசமாவது, நேசமாவது எல்லாம் வெளிவேடம் என்று புகலும் நன்றி கொன்றவர்கள் உலவும் நாடிதில் பாசத்தாலும், நேசத்தாலும் கழகத்தைக் காத்துவரும் பண்பாளர் நமது அண்ணா! ஒரு மாபெரும் இயக்கத்தை தன் அன்பினால் கட்டியாளும் தலைவன் உலகத்திலேயே அண்ணாவைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது!

மேடையிலே ஏறிவிட்டால் நமதண்ணா ஓடையிலே ஓடி வரும் ஆடிப் புதுப் புனல்போல் சொல்லுதிர்ப்பார். தமிழ் நடையிலே புதுமை கண்டு, இனிமைச் சேர்த்துப் புதுப்பாதை வகுத்திடுவார். கனிச்சொல் சொல்லிடுவார், காய்களைத் தள்ளிடுவார். வீணையின் நாதம்போல் எழும்பிடும் அவரது குரல் விடுதலை கீதம் பாடும்! இகழ்ந்திட்டார் யாரேனும் தமிழை யென்றால் இடிமுழக்கம் செய்திடுவார். கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறமுடையார், சொலல்வல்லார் சோர்விலார் நமது அறிஞர் அண்ணா!

பாசத்தால் அனைவருக்கும் "அண்ணா"வானார். அறிவுகண்டு ஆற்றல் கண்டு அவரை அறிந்தவரெல்லாம் "அறிஞ"ரென்றனர். தமிழர்தம் படை செலுத்தும் தன்மையினைப் பார்த்தோரெல்லாம் "தளபதி" இவர்தானென்றனர். நாவன்மைமிக்க அவரை நல்லறிவாளரெல்லாம்கூடி "நாவலர்" என்றுரைத்தனர். நாடகத்தில் நடித்திடும் திறமை கண்டு "தேர்ந்த நடிகர்" இவரே என்று புகழ்ந்தோர் பலர்! நல்ல தமிழில் வசனம் தீட்டி புதுமை நாடகம் சமைக்கும் "நமதண்ணா ஓர் பெர்னாட்ஷா" என்றார் கல்கி!

இத்தனை சிறப்புகளுக்கும் உரியவர் நமது அண்ணா! அந்த அண்ணா நமக்குத் தலைவர்! எண்ணிடும் போழ்தெல்லாம் இதயம் இனித்திடும்! எவருக்கும் கிடைக்காத அண்ணன் எனக்குக் கிடைத்தார் என்று ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் விம்மிப் பூரிக்கும்.

வள்ளுவர் வாழ்ந்தபோது நாம் வாழவில்லை! தமிழில் வல்லவர்கள், பெரும் தலைவர்கள் பலரை நாம் கண்டதேயில்லை!

ஆனால், ஒப்பற்ற அறிஞர், திராவிடத்தின் வழிகாட்டி, அறிஞர் அண்ணா வாழும் இந்த தமிழ் நாட்டிலேயே நாம் பிறந்திருக்கிறோம், அவர் வாழும் இந்த நூற்றாண்டிலேயே நாமும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அவர் தலைமையின் கீழ் பணி புரிகிறோம். அவரைப் பார்த்து, பழகி மகிழ்கிறோம். இதைவிட நமக்கு வேறென்ன பெருமை வேண்டும்?

தமிழ் மகனாகப் பிறந்த ஒவ்வொருவரும் எண்ணியெண்ணிக் களித்திடவேண்டும் இந்நிலை கிடைத்தமைக்கு!

திராவிடர் அனைவரும் கண்களைப்போல் பேணி காக்க வேண்டிய பொக்கிஷம், கருத்தில் நிலைத்து நிற்கவேண்டிய உருவம் —அண்ணா!

தலைவரென்ற பெயரில் இங்கே பலருண்டு! ஆனால் இந்தத் தலைமுறைக்குத் தலைவராகத் திகழும் தனிப்பெரும் தகுதி, திறமை, ஆற்றல் அண்ணாவுக்கு மட்டும் தான் உண்டு!

வாழ்க பேரறிஞர் அண்ணா!

○

சான்றாண்மைக்குச் சான்று எம் அண்ணா!

சான்றாண்மை என்ற சொல் தமிழ்மொழி ஒன்றிற்கே உரியது. சான்றாண்மைப்பண்பு தமிழகத்தின் தனிப்பட்ட சொத்து. அச்சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டு அறிவுலக மாமேதை அறிஞர் அண்ணா.

ஆண்மை என்ற சொல்லுக்கு ஆளுந்தன்மை என்பது பொருள். வாளாண்மை என்றால் வாளை ஆள்வதும், தாளாண்மை என்றால் தாளை ஆள்வதும், வேளாண்மை என்றால் (வேளை) மண்ணை ஆள்வதும், சான்றாண்மை என்றால் தன்னை ஆள்வதுமாகும். அச்சான்றாண்மை எப்படி இருக்கும் என்றால் அறிஞர் அண்ணாவைப்போல் இருக்கும். எங்ஙனமெனின் ?

பகைவரை அஞ்சாது எதிர்த்துப் போர் புரியும் வீரச் செயலைப் பெருமைமிக்க ஆண் தன்மை என்றும், தன்னை எதிர்த்த அந்தப் பகைவனுக்குத் துன்பம் நேர்ந்தபோது அதையே தனக்கு நல்ல வாய்ப்பாக்கிக்கொண்டு அவனை வெல்ல எண்ணாமல், அவனுற்ற துன்பத்தை அவன் நீக்கிக் கொள்ளும் வகையில் அவனுக்கு உதவி புரிந்து, பிறகு அவனைப் போரில் வெல்ல நினைக்கும் பெருந்தன்மை வாய்ந்த செயலை ஆண்மையினும் சிறந்ததோர் ஆண்மை என்றும் வள்ளுவர் பெருமான் கூறுவதை அவர் வாயாலேயே கேளுங்கள்.

'பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.'

என்கிறார்.

அத்தகைய ஆண்மையின் கூர்மை நிறைந்தவர் தென்னாட்டு காந்தி அறிஞர்அண்ணா ஆகவேதான் விலைவாசி உயர்வு அறப்போரில் சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதை செய்தும்; வெளிவந்த நேரத்தில் இந்தியத்துணைக் கண்டத்திற்கு, சீனால் ஆபத்து என்றதும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

எனும் குறள்மொழிக்கொப்ப பிரச்சினையின் மெய்ப்பொருளை உணர்ந்து, ஆள்வோர் இழைத்த கொடுமைகளை மறந்து; சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து, வானொலியிலும், பொதுக்கூட்டங்களிலும், பேசியும் நிதி திரட்டித் தந்து உதவியும், பகைவன் தனக்குற்ற இடுக்கண் களைய உடனிருந்து, பிறகு இன்றையத் தினம் தமிழ்த் தாய்க்கு நேர்ந்த மானக்கேட்டைப் போக்கவும், இந்தி மொழித் திணிப்பால் செந்தமிழ் நாட்டின் சீரிய செம்மல்கள் இரண்டாந்தர குடிமக்களாக்கப்படாமல் தடுக்கவும் போர்க்குரலெழுப்பி முரசம் கொட்டி வருகிறார். புரட்சி வழியிலேயோ, மறப்போர் முறையிலேயோ போர்க்கொடி உயர்த்தவில்லை. அறநெறிப் பண்பிலிருந்து சிறிதும் மாறாமல், தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் அறப்போரை நடத்தி வருகிறார். இதுதான் தன்னை ஆள்வது எனும் சான்றாண்மைக் குணம் ஆகும்.

ஆண்மையை வீரத்திற்கும், பெண்மையை அன்பிற்கும்'ஒப்புக் கூறுவது உலக வழக்கு. என்றாலும் ஆண்மை என்பது வீரத்திற்கும், வலிமைக்கும் மட்டுமின்றி அன்புக்குஞ் சகிப்புத் தன்மைக்குங்கூட வேண்டப்படும் ஒன்று. அப்போதுதான் அந்த ஆண்மை சான்றாண்மையாக மாறுகிறது. இதுதான் அறிஞர் அண்ணா அவர்கள் கூறும் குடும்ப பாசம்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தத்துவ நீதிகள். இதைப் புரிந்து கொள்ளாத சிலர் குடும்ப பாசத்தைக் குறை கூறுகின்றனர். இவற்றைச் சகித்துக் கொள்ளும் சகிப்புத் தன்மை அறிஞர் அண்ணா அவர்களிடம் மிகுந்திருப்பதாலேயே அவர் சான்றாண்மைக்குச் சான்றாக விளங்குகிறார்.

சான்றாண்மைக்குத் தமிழகம் தந்த பெருமை மிகப் பெரியதாகும். 'தோல் வற்றிச் சாயினும் சான்றாண்மைக் குன்றாதே' என நல்லாதனாரும்; 'நல்ல மகனாய்ப் பிறந்தும் சும்மா திரியாதே; சான்றோன் எனத்திரி' என ஔவையும்; 'பல ஆண்டுகளாகியும் என் தலை நரைக்காததற்குக் காரணம் நான் வாழும் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றனர்' எனப் பிசிராந்தையார் புறநானூற்றில் காட்டும் புதுமையும், சான்றாண்மைக்குத் தமிழகம் தந்த பெருமைகளாகும். இந்தப் பெருமைகளினும் பெருமை சான்றாண்மைக்கு யாதெனில், அச்சான்றாண்மைக்குச் சான்றாக சரித்திரத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இருப்பதுதான்.

அன்பாயிருத்தல், பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்தல், எவரையும் உற்ற உறவாய்க் கொள்ளுதல், இயன்றவரையில் எளியவர்க்குதவுதல், எப்போதும் உண்மையே பேசி மகிழ்தல் என்ற ஐந்தையும் தூண்களாக நிறுத்தி, மேலே சால்பைப் பரப்பி வள்ளுவர் பெருமான் கட்டித் தந்த கட்டிடமே,

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்'

எனும் குறட் பேரவை. அப்பேரவையின் கண் கொலுவீற்றிருக்கும் கொற்றவனே, சான்றோரினும் சான்றோன் நம் அண்ணன்.

கல்வி, கேள்வி, செல்வம், அழகு, வண்டி, வாகனம், ஆடை அணிகலன், பட்டம், பதவி முதலிய நலன்களையெல்லாம் அடக்கி அதன்மேல் உயர்ந்து நிற்கும் குண நலனே சான்றோரை நமக்குக் காட்டும் கருவி. இக்குன்றின் மீது நின்று வீசும் சுடர்நிறை ஒளி விளக்காக இருக்கிறார் நம் அண்ணா' இத்தியாகத் திருவிளக்கிற்கு, இந்தித் திணிப்பு எனும் கனலை மூட்டி சினத்தையும் விட்டனர் ஆள்வோர்.

'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது'

என்கிறார் பொய்யாமொழிப் புலவர். அதுபோல் குணமென்னும் குன்றேறி நின்று குமுறும் கோளரியாம் நம் அண்ணனின் சினத்திற்கு ஆள்வோர் பலியாவது உறுதி.

இக்குணச் சீலரின் பிறந்த நன்னாளே செப்டம்பர் 15. இதைக் கேட்கிறபோது நம் காதெல்லாம் இனிக்கிறது. எண்ணுகிறபோது எண்ணமெலாம் இனிக்கிறது. அண்ணனைப் பற்றிப் பேசுகிறபோது நம் வாயெல்லாம் இனிக்கிறது. வாயினின்று எழும் பேச்செல்லாம் இனிக்கிறது. அன்னவனின் திருவுருவைக் காண்கிறபோது நம் கண்ணெலாம் இனிக்கிறது. இந்தப் பொன்னாளில் சான்றாண்மைக்குச் சான்றான நம் அண்ணன் பல நலம் பெற்று, பல்லாண்டுகள் வாழ்ந்து, அவரது தூய தொண்டு சிறக்க விழைவோமாக.

வாழ்க அண்ணா!

வளர்க அவர்தம் புகழ்!

ஒளிர்க அவர்தம் சான்றாண்மை!

தா. ந. டில்லிபாபு (பி.காம்.)

திராவிடன்

15—9—64

நாவலாசிரியர் அண்ணா!

[திருவடியான்]

○

ஒருவர் சிறுகதை எழுதுவதிலே சிறந்தவராக இருக்கலாம். இன்னொருவர் நாவல் எழுதுவதிலே கை தேர்ந்தவராக இருக்கலாம். மற்றொருவர் நாடகம் எழுதுவதிலே கெட்டிக்காரராக இருக்கலாம்—இப்படி ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையிலே நிபுணராகவும், மேதையாகவும் விளங்குவதைப் பார்க்கலாம். ஆனால்; தமிழ்நாட்டில் ஒரு மனிதர் மேற்குறிப்பிட்ட எல்லாத் துறைகளிலுமே நிபுணராகவும் மேதையாகவும் விளங்குகிறார் என்பதோடு, இன்னும் பேச்சுக் கலையிலும் அவர் முடிசூடா மன்னராகவே இருக்கிறார் என்று சொன்னால் அது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெருமையும் பூரிப்பும் கொள்ளக்கூடிய விசயந்தான் என்பதில் என்ன சந்தேகமிருக்க முடியும்?

அப்படிப்பட்ட அற்புத ஆற்றல் படைத்த அந்த மேதையைப் பற்றி 1957-ம் வருடம் பொதுத் தேர்தல் சமயத்தில், மாற்றுக் கொள்கைகளையுடைய 'ஆனந்த விகடன்' கூட ஒரு தலையங்கத்தில் **"புதியதோர் இலக்கிய சமுதாயத்தை சிருஷ்டித்த பெருமைக்குரிய மனிதர் அண்ணாதுரை"**—என்று குறிப்பிட்டிருந்தது.

புதியதோர் இலக்கிய சமுதாயத்தையே உருவாக்கி வளர்த்துவிட்ட பெருமைக்குரிய அண்ணா அவர்களது பேனா தமிழிலக்கிய உலகிற்குத் தந்துள்ள சாகாவரம் பெற்ற மகோன்னத இலக்கிய சிருஷ்டிகளில் ஒன்றுதான் 'ரங்கோன் ராதா'

பார்வதி பி.ஏ., குமரிக் கோட்டம், கபோதிபுரக் காதல் போன்ற சிலபல நாவல்களை அண்ணா அவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றாலும்—அண்ணாவை நாவல் ஆசிரியராக்கிக் காட்ட அவைகளையெல்லாம் கோடி, காட்டித்தான் ஆகவேண்டுமென்பதில்லை. அவைகளையெல்லாம் விமர்சிக்கப் புகுவதற்கு பக்கக் கட்டுப்பாடு ஆசையை,அணை போட்டு தடுத்து விடுகிறது.

அண்ணாவுக்கே அவர் எழுதியவைகளில் மிகவும் பிடித்தப் புத்தகம் 'ரங்கோன் ராதா' என்று பலர் சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறேன்—எனவே அதையே முழுமையாக விமர்சித்து விட்டால் போதுமென்றே கருதுகிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெள்ளிக்கிழமை, கோட்டையூர் மக்களெல்லாம் குமுறினார்கள்; 'மகராஜி! புண்ணியவதி! போய்விட்டாள். பச்சைக் குழந்தையை விட்டுவிட்டுப் போய்விட்டாள்! என்று கூறினர். **அன்றுதான் நான் இறந்துவிட்டேன்**—என்று 20 வருடங்களுக்கு முன்பு தான் இறந்ததையும், சுடலையில் தன் பிணத்துக்கு நெருப்பு வைக்கப்பட்டதையும், தீ நன்றாகப் பிடித்துக் கொண்டதையும், இறந்து போய்விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கும் மகனிடமே ஒரு தாய் கதை சொல்ல ஆரம்பிப்பதாக ரங்கோன் ராதா வரலாறு ஆரம்பமாகிறது.

படிக்கிற நமக்கு திகைப்பு ஏற்படுகிறது; மூட நம்பிக்கைகளைக் கண்டிக்கும் அண்ணாவா இப்படி இறந்தவள் எழுந்து வந்து பேசியதாக எழுதுகிறார் என்று வியக்கிறோம். ஆனால் இறந்து போனதாக நம்பப்பட்ட ரங்கம் கதையைச் சொல்லச் சொல்ல, மூட நம்பிக்கைகளை அண்ணாவின் பேனா எவ்வளவு வேகத்தோடு சாடி, விவேக விளக்கம் சொல்ல அந்தக் கதை இடந்தந்திருக்கிறது என்பதை அறிந்து, வியப்பு நீங்கி பெருவியப்பு அடைகிறோம்!

பெண்களுக்கு ஆண்கள் சமுதாயம் எந்த அளவுக்கு அநீதி இழைக்கின்றது என்பதையும், அதற்கு சமூகத்தின் மூட நம்பிக்கையும், மடமைக் கருத்துக்களும் எப்படித் துணை போகின்றன என்பதையும், மையமாகக் கொண்டு பின்னப்பட்டதுதான் இந்தக் கதை.

கோட்டையூரார், தன்னுடைய மாமனார் வீட்டுச் சொத்துக்கள் அனைத்தும் தனக்கேச் சேரவேண்டும் என்கிற பேராசையால் தனது மூத்த மனைவி ரங்கத்தின் தங்கை தங்கத்தை திருமணம் செய்து கொள்வதற்காக, ரங்கத்திற்குப் பேய் பிடித்துவிட்டது எனக்கூறி, மாமனாரையும், ஊராரையும், நம்ப வைத்து வெற்றி பெறுகிற வகையையும், அதே பிற்போக்குச் செயல்களை, காமுகனான பேய் ஓட்டும் பூசாரி தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகின்ற முறையையும், இரு வேறு கோணங்களில் நின்று விமர்சிப்பது வெகு லாவகமாக அமைந்திருக்கிறது.

ஒரு நாவலை அது தோன்றிய காலத்தை வைத்து நோக்குவது மிகவும் அவசியம். இன்றைய சமுதாயத்துக்கும் இந்த நாவல் எழுதப்பட்ட, பதினைந்து ஆண்டு காலத்துக்கு முந்திய சமுதாயத்துக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. இன்றைக்கிருக்கிற சமுதாயம் எந்த சீர்திருத்தக் கருத்தையும், ஏற்றுக்கொள்ளச் சற்றுத் தயங்கினாலும், எரிச்சல் கொண்டு எதிர்ப்பதில்லை! ஆனால் அண்ணா அவர்கள் எழுதிய காலமோ!... ...எந்த ஒரு எழுத்தாளரும் அந்தந்தக் காலத்துக்கு ஏற்றாற்போல் எழுதி பெயரும் புகழும் சம்பாதிக்கத்தான் விரும்புவர். பிரச்சினைக்குரியதும், பலரால் முதலில் பாராட்டப்படாததுமான விசயங்களை துணிச்சலுடன் எழுதுவதற்கு அந்தக் காலத்தில் அண்ணா போன்றவர்களுக்குதான் திராணி இருந்தது.

கசப்பான'மருந்துகளில் இனிப்பு சேர்த்துத் தருவது போல சமூகம் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் விசயங்களையும் தனது எழில்மிக்க நடை சிறப்பால் நாவலில் புகுத்தினார் அண்ணா! பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை. அண்ணாவின் எழுத்து நடையைப் பற்றி நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

"ஜப்பானின் குண்டுகள் அங்கு விழாமலிருந்தால் அவர்களை நீ கண்டிருக்கவே முடியாது......" என ஆரம்பித்து நாகுவின் அன்னை கதையை கூறுவதாக அமைத்து, தனது அன்னை சொன்ன கதையை அவனுடைய நண்பன் பரமனுக்கு கூறியதை பரமனே கூறுவதாக பின்னிப் பின்னி ஆங்காங்கே கதையை யார் சொல்கிறார் என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டிச் செல்லும் உத்தியும் பாணியும் புதுமையானது.

தன்னுடைய அழகு தமிழ் நடையால், படிப்பவர்களுக்கு பரவசமூட்டி அதே சமயம் பகுத்தறிவுக் கருத்துக்களையும் லாவகமாக படிப்போர் மனத்தில் புகுத்தி நாவலில் வெற்றி பெறுவதோடு, தான் சார்ந்த இயக்கத்திற்கும் பெருவெற்றியைத் தேடித் தந்திருக்கிறார் அண்ணா!

பிரச்சாரத்தைக் கருப் பொருளாக்கி எழுதப்படும் நாவல்கள் அனைத்தும் வெற்றிபெறுவதில்லை. ஆனால், "ரங்கோன் ராதா"வோ இதற்கு முற்றிலும் மாறுபட்டது.

அருமையான அறிவுரைகளாலும், ஆற்றல்மிகு சொற்களாலும் நளினமான உவமைகளாலும், படிப்பவர்களின் மனதை நிறைவுபடுத்தி தெளிவு பெறச் செய்கிறது.

"அடக்கம் இருக்க வேண்டும். ஆனால் அசடாக இருக்கக்கூடாது. புத்தி இருக்கவேண்டும்; ஆனால் போக்கிரித்தனம் கூடாது. அழகு இருக்கவேண்டும்; ஆனால் ஆளை மயக்கும் நோக்கம் இருக்கக்கூடாது. படிப்பு இருக்கவேண்டும்; ஆனால் படாடோபம் இருக்கக்கூடாது. சகஜமாகப் பழகவேண்டும்; ஆனால் சந்து பொந்து திரியும் சுபாவம் கூடாது"—இப்படி பரமன் தனது கற்பனையில் தீட்டிய இலட்சிய மங்கையை நினைவூட்டி, மேற்கண்ட இலக்கணத்துக்கு உரியவள்தானா 'ராதா' என நாகு கூறுவதைப் படிக்கின்ற ஒவ்வொரு வாலிபன் உள்ளத்திலும் வருங்கால மனைவியின் இலட்சணம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் எழும் என்பதில் ஐயமில்லை.

அப்பா! நான் என் மகனைக் கண்டேனே தவிர நீ உன் தாயாரைப் பார்க்கவில்லை. இன்று நடப்பது அவ்வளவும் ஏதோ ஒரு கனவில் நடந்தது என்று எண்ணிக் கொள். உன் வாழ்க்கைக்கு நான் சனியனாக மாட்டேன்...என் புத்திக் குறைவினாலும் உன் அப்பாவின் கிராதகத்தாலும் நான் இக்கதியானேன்...விபசாரியாகி விட்டேன் என்பது தெரிந்தால் உலகம் உன்னை கேவலமாகப் பேசும். நீ தத்தி நடந்ததை, கொஞ்சிப் பேசியதை ஓடி ஆடியதை நான் பார்க்கவில்லை மகனே! உன் பெயர் என்னடா......என தான் பெற்ற மகனிடமே, பரிதவிப்புடன் மிகவும் நொந்த நிலையில் ரங்கம் கூறும்போது, நாகு அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொண்டு கண்ணீர் விடுகிறான். அவன் மட்டுமல்ல—

(12-ம் பக்கம் பார்க்க)



காஞ்சி காரிக்கண்ணனார்!

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

தமிழ் வாழ்க!

இப்பொழுதல்ல 1937 முதலே குரல் கொடுத்துக் கொண்டிருப்பது அறிஞர் அண்ணா அவர்களே! அண்ணா அவர்க'ளே' என்று ஏகாரமிட்டுத்தான் எழுத வேண்டும். ஏனென்றால் தமிழ் வாழ்க குரல் கொடுத்தவர்கள் எத்தனையோ பேர்கள் உண்டு. ஆனால் மறைக்காகத் தாழ்வாரத்தில் ஒதுங்கியவர்களெல்லாம் இல்லத்தவராக முடியாது அல்லவா? அதைப்போல் சந்தர்ப்ப சூழ்நிலையில் தம்மை வளர்த்துக் கொள்வதற்காக செயல்பட்டவர்களை நீடு புகழலால் பாட முடியுமா?

அறிஞர் அண்ணா அவர்கள் தான் அன்று 1937-ல் எழுப்பிய உரிமைக்குரலை இன்றுவரையிலும் தமிழுக்குத் தீங்கு உருவாகும் போதெல்லாம் சிறையா? சம்மதம்! தடியடியா? தாக்கிக்கொள்! சித்திரவதையா? செய்து தீர்! என்று தனக்கு இழைக்கப்படும் இன்னல்களைக் கருதிக் கவலைப்படாமல் தொண்டாற்றி வருகிறார்கள்; ஆம்! பச்சையும் இச்சையும் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் ஆளாகாமல் இலட்சியப் பிடிப்புடன் பணிபுரியும் பண்புநிறைந்த தலைவர். ஆகவேதான் இப்பெருமை முழுவதும் அறிஞர் அண்ணா அவர்கட்கு மட்டுமே உரிமையுடையதாகும்.

அழுத்தந்திருத்தமாகச் சொல்லலாம் தமிழ் வாழ்வைக் காப்பதற்கே பிறந்த தன்னிகரில்லாத தமிழ் மகன் அறிஞர் அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா பிறந்த தினத்தன்று நாடு மகிழ்கிறது விழா நடத்தி! நற்றமிழ் பெருமைப்படுகிறது அவருடைய சிறப்புகளைக் கூறி. ஆனால், பணம் — சித்திரானங்கள்—பஸ் பயணம் என்ற சலுகைகள்தான் ஏனோ பேசவில்லை!

அண்ணா அவர்களது தலைமையில் பணிபுரிந்துகொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, தமிழால் வாழ்பவர்கள்; தம் எதிர்காலத்தைத் தமிழால் உறுதியாக்க வேண்டியவர்கள் எல்லாம் எதிர்ப்பதும் ஏதேதோ கூறுவதுமாக இருப்பதுடன்; ஒன்றுமறியாததாலோ, அல்லது அறிந்தும் அறியாதவர்போல்; "தமிழுக்கு ஆபத்தா? வருமா? விடுவேனா நான்!" என்று தாம் தான் அத்தனையையும் ஆட்டுவிக்கும் ஆள் எனும் பாவனையில் மேடையில் கூறுவதும்; "குறிச்சி லாவ்" என இந்தி மொழியினர் முன் பேசி, அவர்களிடம்தான் அந்த மொழியின் தூதன்தான் என்று பாராட்டுப் பெறுவதும் போன்ற பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலுமாக உணர்வற்ற; மானமிழந்த வாழ்வுள்ளங்கள் அதிகாரத்துக்குரியவர்களாக இருந்து அளிக்கும் அல்லல்களைப் பற்றி அக்கறையற்று சொல்லும் செயலும் ஒத்த பண்புடன் பொது வாழ்வில் தம் நலன்களையெல்லாம் பலியிட்டு தமிழையும், தமிழர்களையும் தாழவிடாது கட்டிக் காக்குந் தனிப் பெரும் பிறப்பு செப்டம்பர் 15!

ஒரு காலத்தில் தமிழர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி தமிழைக் காப்பதற்காகவும் பெல்லாரி சிறையில் வேதனையைச் சொந்தமாக்கிக்கொண்ட பெரியாரே இன்று எதையோ எண்ணிக்கொண்டு, "தமிழுக்கு ஆபத்து வராது; அவரே கூறிவிட்டாரே" என்று சிந்தனைக்கு ஏற்காத சமாதானத்தைச் சொல்லுமளவுக்கு நிலை மாறியிருக்கிறார்.

தனிக் கட்சியைத் துவக்கியவர்—இல்லை—மேய்ப்பானான மேய்ப்பன் தன் மந்தை ஆடுகளை கசாப்புக் கடைக்காரனிடம் கூட்டிச் சென்று ஒப்படைப்பதுபோல் தன்னிடமிருந்த சிலரையும் எங்கேயோ கொண்டு போய்ச் சேர்த்துவிட்டவர் — தான்தான் வீராதி வீரன் என்று கூறி ஒரு நாள் கூத்தடித்துவிட்டு; இன்று தமிழைத் தாழ்த்திடும் ஜோதியில் ஐக்கியமாகிவிட்டவர் மற்றொருவர்.

ஆனால் 'வைத்தவன் எடுக்க வேண்டும், வழிதெரிந்தவன் நடக்கவேண்டும்' என்ற பழமொழிபடி இந்தியைத் திணிக்கத் துவங்கிய திரு. இராசகோபாலாச்சாரியார் இன்று இந்தி எதிர்ப்பாளர்! தமிழ் காக்கும் பெரும் பணியில் தலை நிமிர்ந்து நிற்கிறார் தள்ளாத பருவத்திலும்.

இந்தச் சேர்க்கை இலக்கிய காலத்தை நினைவுபடுத்துவதாக உளது. பிணங்கி வேறுபட்டு பகை வாழ்வு வாழ்ந்து தமிழகத்தில் நலம், வளம் குன்ற மூவேந்தர்கள் இருந்த காலத்தில் ஓரோர் சமயம் ஒற்றுமையுடனிருந்து நாட்டை வலிவுடன் வாழ வைத்த நிகழ்ச்சிபோல்.

அவர்களது ஒற்றுமை வாழ்வுக்காக அறிஞர்கள் காட்டிய பெரு ஊக்கமும்; திருமாவளச் சோழனும், பெருவழுதிப் பாண்டியனும் ஒருங்கு சேர பல இடங்களில் தோற்றமளித்து தமிழையும் தமிழர்களையும் தலைநிமிரச் செய்ததை உருவாக்கி உளமகிழ்ந்தவர் காவேரிப்பூம் பட்டிணத்து காரிக் கண்ணனார்.

அந்த ஒற்றுமைக்காக காரிக் கண்ணனார் முயற்சியெடுத்துக் கொண்டதற்குக் காரணமே, அன்றையத் தமிழகம் தாழ்வுறுவதற்கும்; தமிழர்கள் தாழ்ந்தவர்களாகத் தோற்றமளிப்பதற்கும் மூவேந்தர்களான தமிழ் மன்னர்கள் தம்முள் 'யார் பெரியவர்' என்ற அகந்தையையும் போட்டியையும் பொருமையையும் மோதவிட்டு தம்முள் பிணங்கி வேறுபட்டு பகை கொள்வதையுமே அன்றுடப் பொழுதுபோக்காக கொண்டிருந்ததால்தான். நாட்டுக்குரியவர்களிடையே பிணக்கு என்றால் புதிதாகக் குடிபுகுந்தவர்களுக்கு லாபந்தானே! அதைப்போலவே மூவேந்தர்கள் ஒற்றுமை குறைந்தவர்களானதுடன் வந்து குடியேறியவர்களுக்கு தாழ்ந்து கொடுத்து அவர்களை உயர்த்துவதிலும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுச் செயல்படலானார்கள்!

கிடைத்த வாய்ப்பை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக, நாட்டவரையும் நாட்டையும் தம் பிடிக்குள் வைத்துக்கொள்வதற்காகவும் அவர்கள் முதன் முதலாகச் செய்த சூழ்ச்சி மொழியில் சிதைவையும், செருகலையுந்தான். தங்கள் மொழியும் தாங்களுமே தமிழையும், தமிழர் சமுதாயத்தையும் துணைநின்று பண்டு தொட்டு வாழவைக்கிறது என்று மேலெழுந்த முறையில் காண்போர் மயக்கமடையத் தக்கபடி செயல்களைச் செய்து கொண்டனர்.

அதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளமுண்டு. உதாரணத்துக்கு குடநாட்டு மலைகளுள் "ஏழில் மலை" என்பது ஒன்று. பண்டைத் தமிழர் கையாண்ட இசைக்கருவிகளில் 'ஏழில்' என்பது ஒன்றாகும். அந்தக் கருவியின் உருவம் போல் அந்த மலையிருந்ததால், 'ஏழில் மலை' எனப் பெயரிட்டனர். ஆனால் நாட்டில் இடைக்காலத்தில் குடியேறியவர்கள் தம் மொழி ஆட்சி கருதி 'ஏழில்' என்பதின் தன்மையைத் தகர்த்துவிட்டு ஏழிலை—ஏழாக்கி "சப்த சயிலம்" என்றழைத்து அந்தப் பெயரை நிலைபெறவும் செய்து—இன்று தமிழர்களே மயங்கி சப்த சயிலம் என்று கூறும்படி செய்துவிட்டனர்.

மதுரைக் கூடவாயில் என்ற தமிழ்ச் சொல்லை "கபாடபுரம்" என்றும்; மேற்கு தொடர்ச்சிமலை என்பதை "சஹ்யாத்ரி" என்றும் முதுகுன்றத்தை "விருத்தாச்சலம் என்றும் மொழி மாற்றி—அம் மொழியும், அம்மொழிக்குரிய மக்களும் இந்த நாட்டின் பழங்குடிகள் போலவும்; அந்த மொழியில்லையேல் தமிழ் மொழியால் மட்டும் இயங்க முடியாததுபோலவும் ஒரு அதிர்ச்சி நிலையைக் காண்போருக்கு ஏற்படச் செய்துவிட்டனர். காரணம் ஒற்றுமையற்ற தமிழ் மூதாதையர் மனப்போக்கும்; மொழி அருமை மறந்த அவலச் செயலுமே!

நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தச் சூழ்ச்சிகளை அறிந்து அலமந்தவர்கள் அறிஞர் பெருமக்களே! ஆகவே, மன்னர்களிடம் அவ்வப்போது 'ஒற்றுமை குறித்தும்' மொழி காப்புக் குறித்தும் அறிவுரை புகன்று கொண்டிருந்தனர். இந்த ஆன்றோர் முயற்சியால் ஏற்பட்டது, அப்போதும் ஓர் நல்ல சூழல். அதுதான் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவனும்; பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் நட்புடன் வாழ்ந்தது நாடெங்கும் இருவரும் ஒன்றாகவே வலம்

(15-ம் பக்கம் பார்க்க)

அண்ணா பிறந்தார்!

ஒரு சகாப்தம் முடிந்து மற்றொன்று துவங்குவது எப்போது என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது; ஆனால், தமிழகத்தின் புதுமைச் சகாப்தம் இன்றைக்குச் சரியாக 55 ஆண்டுகளுக்கு முன்னால், இதே செப்டம்பர் 15-இல் தொடங்கிற்று என்பதை உறுதியாகச் சொல்லமுடியும். பழங்காலத்து நிறைவான வாழ்வை நிலையான சான்றுகளால் பறைசாற்றிக் கொண்டிருக்கும் காஞ்சி நகரத்தில், நமது எதிர்காலப் பெருவாழ்வை நிர்ணயிக்கப் பிறந்த அறிஞர் அண்ணா அன்றுதான் பிறந்தார். அலைகடல் களையும் வழிப்பாதையாக்கி அரசாண்ட தமிழ்ப் பெருமக்களின் அகவாழ்வுக்குத் துறைக்குக் காஞ்சி நகரம் பலகணியாக இருந்ததுண்டுவீரஞ் செறிந்த புறவாழ்வின் வெற்றியை விளக்கும் அரசியல் சாம்ராஜ்யப் பெருநகராகவும் அது விளங்கியிருக்கிறது. அறிவுத்திறனாலேயே சக்திவாய்ந்த பேரரசை நிறுவியவர்களும் அங்கு பிறந்திருக்கிறார்கள்; அருளுணர்ச்சியாலேயே சாம்ராஜ்யத்தைத் துச்சமென மதித்துத் துறந்தவர்களும் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள். எழுதப்பட்டுள்ள சரித்திரத்தில், அதுவரை காணாத மாபெரும் சாம்ராஜ்யத்தைக் கட்டிக்காத்து வளர்த்தவன் காஞ்சியில் வளர்ந்தவனெனச் சொல்லப்படும் சாணக்கியன். சிந்துநதிக் கரையிலிருந்து நர்மதைப்படுகைவரை அவன் சிந்தனைகள்தாம் அரசியல் சட்டங்களாக ஆட்சி செலுத்தின. இந்தத் துணைக் கண்டத்தில் முதன்முதலாக முடிமன்னன் ஆளுகையில் பெரியதொரு சாம்ராஜ்யம் நிறுவியவன் சாணக்கியன்தான். அதேபோல், இந்தத் துணைக்கண்டத்தின் பேரரசு ஜனநாயக வழியில் அமைவதற்கு உறுதியாகப் போராடிக்கொண்டிருக்கும் மாபெரும் தலைவரும் காஞ்சியில் பிறந்த அறிஞர் அண்ணா அவர்கள்தாம். தனது அற்புதமான திறமைகளைச் சாணக்கியன் பயன்படுத்தியது பற்றி சரித்திராசிரியர்களிடையே மாறுபாடு உண்டு. எனினும், "துணிச்சலும், திட்டம் வகுக்கும் ஆற்றலும், தன்னுடைய நோக்கத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்காத பெருமிதமும், கிடைக்கின்ற எந்தச் சாதனமானாலும் அதைக்கொண்டே எதிரியைப் பணியவைக்குந் திறனும்" கொண்டவனாகச் சாணக்கியனை பண்டித நேரு வருணிக்கிறார். இவைகள் சாணக்கியனுக்கு மட்டுமே அமைந்திருந்த தனிப்பட்ட குணங்களல்ல; காஞ்சி மண்ணுக்கே உரித்தான பண்பு என்பதை, அண்ணா அவர்களின் ஆற்றலை நன்குணர்ந்தோர் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

அண்ணா அவர்களின் ஆற்றலும் சிந்தனையும் சக்தி வாய்ந்தவை. ஓராயிரமாண்டு தூக்க மயக்கத்தை ஒரு தலைமுறை காலத்தில் ஒழித்துக்கட்டி, இந்த நாடு முன்னேற்றப்பாதையை தடந்தெரிந்து கொள்வதற்கு அண்ணாவின் சிந்தனைகளே முழுமுதற் காரணமாக அமைந்திருக்கின்றன. ஒரு தனி மனிதருடைய கருத்துக்கள் அந்தச் சமுதாயத்தில் எத்தகைய ஆதிக்கம் வகிக்கின்றன—எவ்வளவு புயல்வேக மாற்றத்தை உண்டுபண்ணுகின்றன என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அந்தத் தனி மனிதருக்கு அந்த நாட்டு மக்கள் செல்லப் பெயரொன்று இட்டு, அதன் மூலமாக அவரைக் குறிப்பிடுகிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். இத்தகைய சிறப்பு, சரித்திரத்திலேயே வெகு சிலருக்குத்தான் கிடைத்திருக்கிறது. இந்த நூற்றாண்டைப் பொறுத்தவரை, டிவேலரா, ரூஸ்வெல்ட், காந்தி போன்ற நாலைந்துபேருக்கே அத்தகைய செல்லப் பெயர்கள் இடப்பெற்றிருக்கின்றன. இந்த நாலைந்து பேரில் நமது அண்ணா அவர்களும் ஒருவர் என்பதைக் கொண்டே, அவருடைய சிறப்பை இந்த உலகம் வருங்காலத்தில் கணிக்கும் என்பது உறுதி. வேறு இடத்தின் தத்துவங்களையும், வேற்று மனிதர்களின் சிந்தனைகளையும் தன்மீது திணிக்கும் யாருக்கும் இத்தகைய தனிப் பெயரைக் கொடுத்து சமுதாயம் கவுரவிப்பதில்லை. தனது பண்பாடு — தனது நெறி முறை— தனது பழக்கவழக்கம் ஆகியவைகளை யொட்டியே தனிப்பாதை அமைத்துக் கொடுக்கும் தலைவர்களுக்குத்தான் செல்லப் பெயரிட்டுத் தனது அன்பைத் தெரிவிக்கும்.

கிழக்கத்திய உலகத்தின்— குறிப்பாகத் திராவிடத்தின் பண்பாட்டுச் சின்னமாக எளிங்கும் சக்திவாய்ந்த ஒரு தலைவரைக் காண வேண்டுமா? மனித குலத்தையே வியப்பிலாழ்த்தி உலுக்கியெடுக்கும் எந்தத் தத்துவமானாலும், அதனைத் தமிழ்ப் பண்புக்கு ஏற்றதாக இருக்கிறதா என்பதைச் சீர்தூக்கிப் பார்த்தே ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லும் அரசியல் குடும்பத் தலைவரொருவரைப் பார்க்க வேண்டுமா? எந்த 'இசங்'களையும் கண்மூடிப் பின்பற்றாமல், இந்த நாட்டு மண்ணுக்கும் தட்பவெட்ப நிலைக்கும் ஏற்றதொரு கொள்கையை வகுக்கும் பிறவித் தலைவரைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? இத்தனைக்கும் அறிஞர் அண்ணா அவர்களையே இந்த உலகம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்! அது மட்டுமல்லாமல், வெற்றி பெறுவதில் ஏற்படும் பணிவு; பெற்றுள்ள பலத்தினால் தோன்றும் பொறுப்புணர்வு; எதிர்நிற்கும் பணிகளைக் கவனத்திற்கொண்டு, இதுவரைச் சாதித்திருக்கும் மகத்தானசாதனைகளையும் குறைவாக மதிப்பிடும் மனப்பண்பு ஆகிய அத்தனைக்கும் நிலைக்களனாக நிற்கும் ஒருவரைக் காணவேண்டுமானாலும்; அறிஞர் அண்ணா அவர்களிடமே சரணடைய வேண்டும்.

தமது 55 ஆண்டுகால வாழ்வில் அண்ணா அவர்கள் ஒரு சகாப்தத்தின் சாதனைகளைப் புரிந்திருக்கிறார். அவர் தொடாத துறைகளில்லை; துலங்காத பொருளுமில்லை. "நாம் இப்போது சிறப்பித்துக் கொண்டாடும் மனிதரின் வாழ்வு மாப்புகழ் படைத்ததாகும். நம்மில் வயதேறிய முதியவர்கள் இதுபோன்ற அற்புதத்தைக் கண்டதே இல்லை; நமக்கு இளைஞர்களாக இருப்போர் ஒருபோதும் இனிக் காணவும் முடியாது" என்று இங்கிலாந்துப் பாராளுமன்றம் அண்மையில் சர்ச்சிலைச் சிறப்பித்தபோது மாக்மில்லன் குறிப்பிட்டார். அவரால் குறிப்பிடப்பட்ட இளைஞர்கள் ஆயாசப்படாமல் இந்தத் தமிழகத்துக்கு வந்து, அறிஞர் அண்ணா அவர்களை இந்நாட்டு மக்கள் போற்றிக் கொண்டாடுவதைத் தாராளமாகப் பார்க்கட்டும். அண்ணா அவர்களது வாழ்வும் ஆற்றலும், இதற்குமுன் தமிழகத்து வரலாற்றில் இருந்தோரை ஒப்பிட்டுச் சொல்லமுடியாதவை; இனியும் நெடுங்காலத்திற்கு யாருக்கும் வாய்க்கமுடியாதவை. ஆயிரமாண்டுச் சரித்திரத்தை நாடகக் காட்சிபோல் நம் கண்முன் கொண்டுவந்து நிழலாட வைத்தவர்கள் அண்ணாவைத் தவிர யாருமில்லை. ஆதிச்சநல்லூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்களின் அகழ்வாராய்ச்சிகள் கூட, அண்ணா சொல்வதைத்தான் குறிப்பிட்டுக் காட்டுவதாக இந்தச் சமுதாயம் எடுத்துக் கொள்கிறதே தவிர, அவற்றிலிருந்து அண்ணாவின் சிந்தனை பிறந்ததாக யாரும் சொல்வதில்லை. முற்பிறப்பு நிகழ்ச்சிகளைக் கூறும் மனிதர்கள் இருக்கிறார்களோ இல்லையோ, நமது மூதாதையரின் வாழ்வுபற்றி அண்ணா அவர்கள் விளக்கியதைப்போல் எந்தச் சரித்திராசிரியனும் இதுவரைச் சொன்னதில்லை; நாமும் அவர்களுக்குச் செவிமடுத்துக் கேட்டதில்லை.

கலைத் துறையிலும் அண்ணாவின் சாதனைகள் யாரையும் வாய் பிளக்க வைப்பனவாகும். கோகேல் எழுதிய 'மேலங்கி'யிலிருந்துதான் புதுமை ருஷ்யச் சமுதாயம் மலர்ந்ததாக லெனின் குறிப்பிட்டான். பழிபாவத்திற்கு பயப்படும் பண்பு ஆங்கிலேயருக்கு உருவாக ஷேக்ஸ்பியர் நாடகங்கள்தாம் ஆணிவேராக இருந்திருக்கின்றன என்று சொல்லப்படுவதுண்டு. புதுமைத் தமிழ் சமுதாயத்திற்கு அண்ணாவின் இலக்கியப்படைப்புக்களே அடித்தளமாக நிற்கின்றன. 'வேலைக்காரி', 'ஓர் இரவு' நாடகங்களிலிருந்துதான் இன்றைய புதுமைக் கலைகளும், புரட்சிக் கருத்துக்களும், சமுதாயத் தொண்டார்வமும் முகிழ்த்திருக்கின்றன. 'நீதிதேவன் மயக்கம்', பழங்காலத்து அரிஸ்டபோன்ஸ், யூரிபிடிஸ் போன்றோர் நாடகங்களைப்போல, நீதியென நினைத்திருந்த போலிகளை அநீதியென ஆக்கிக் காட்டிற்று. அண்ணா அவர்களின் கலைத்துறைப் பிரவேசத்திற்குப் பிறகு, பேராசைக்கு ஆட்படுவோரைக் குறிக்கவும், ஆகாத வட்டி வாங்குவோரை விளிக்கவும், யாரும் "ஷைலக்" என்று குறிப்பிடுவதில்லை. 'வேலைக்காரி' பாத்திரமான 'வேதாசல முதலியார்' என்றே குறிப்பிடும் பழக்கம் சமுதாயத்தில் வேரூன்றிவிட்டது. தாய்க்கோளான சூரியனுக்கு ஈடான ஒளியோ அளவோயின்றி, அதனைச் சுற்றிச்சுற்றி வந்தே தங்கள் இயக்கத்தை நடத்திக் கொண்டு போகும் துணைக்கோள்கள் போலவே, இன்றைய தமிழகத்தின் எல்லாத் துறைகளும் அறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையைச் சுற்றிச்சுற்றியே தமது ஒளியைப் பெற்று வருகின்றன.

இத்தகைய சிறப்புகள் மட்டுமே அண்ணாவைமுழுமையாகவெளிக் காட்டுவனவாகா. "பரமானந்த சிஷ்யர்கள்" யானையைக்கண்டது போல, அண்ணா அவர்களையும் பகுத்து அறிந்தவர்களாகப் பலர் முன்வந்து பசப்பும் காலம் இது. நிர்பந்தமும் வேறு வழியற்ற நிலைமைகளும் வெகுவாகச் சேர்ந்ததால், வேறு வகைகளில் பாதகப்படாமல் அறிஞர் அண்ணா அவர்களை தனித் தனித்துறைகளில் வகுத்து புகழ்ந்து பேசி, சமுதாயத்தில் தாங்களும்வாழ்வதை தெரிவித்துக் கொள்ள விரும்பாதவர் இன்று இங்கில்லை. இத்தகையோர் அண்ணா அவர்களின் அடிப்படைத் தோற்றத்தை அப்படியே மறைத்துவிட முயல்பவர்கள்.

பழகிப்போன சம்பிரதாயங்களை எதிர்த்துப் புரட்சிக்கருத்துக்களைப் போதித்தவர் என்பதாலேயோ, கன்னித் தமிழுக்குப் பொன்னலங்காரஞ் செய்த அவரது தனிஎழுத்து நடைக்காகவோ, "கேட்டார் பிணையக் கேளார் வெட்ப" பேசும் வாசாலகர் என்பதாலேயோ, அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டினரால் போற்றப் படுகிறார் என்றால், அது பிறை நிலவே தவிர முழு வட்டமாகிவிடாது. அவருடைய சிறப்புக்கள் அவர் கொண்டுள்ள அரசியல் கருத்துக்களிலேதான் முழுமையடைகின்றன. தன்னுடைய இனத்தின்—மொழியின்— பண்பாட்டின் - தனித்தன்மையை காப்பாற்றுவதில் விடாப்பிடியாக அவர் நடத்திவரும் போராட்டத்தில்தான், அவருடைய பிறப்பின் புனிதம் அடங்கியிருக்கிறது. இதனை ஒப்புக்கொள்பவர்கள்தாம் அண்ணாவை முழுவதும் அறிந்தவர்கள். "நம்மையும் அறியாமல் நாம் ஓர் புது வரலாற்றுச் சிறப்பினை உருவாக்கிக்கொண்டு வருகிறோம் என்ற உணர்வு எனக்குச் சிற்சில வேளைகளில் ஏற்படுவதுண்டு. எப்போதும் ஒரு பெரிய இயக்கம் ஈர்த்துக்கொண்டதால் அதன் வயப்பட்டுவிட்டதாகவும் எண்ணுகிறேன்" என்று அண்ணா குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய முழு வாழ்வும் இந்த வாசகங்களில் அடங்கியிருக்கிறது. இந்தக் கருத்துடன் இணைந்துதான் அண்ணா அவர்களைச் சரியாகக் கணிக்கமுடியும். "புது வரலாற்றுச் சிறப்பினை" உருவாக்கும் உணர்வு அண்ணா அவர்களுக்கு ஏற்பட்டது தவிர்க்கமுடியாதது; ஏனென்றால், தேவையான நேரத்தில் இந்த நாடு தனக்கெனப் பெற்றெடுத்தப் பெருந்தலைவர் அவர்.

அண்ணா அவர்கள் பிறந்த போது, இந்த நாட்டு மக்கள் எதிலும் பற்றற்ற வேதாந்திகளைப் போல் வாழ்க்கை நடத்துவதே பாதுகாப்பானது என்ற முடிவுக்கு வந்திருந்தனர். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே வாழ்ந்துவரும் தமிழர்கள் தங்கள் முதுமைக்கேற்பப் பிணியையும் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தனர்; 'அகில உலகச் சகோதரத்துவ முழக்கங்கள்' தமிழர்களின் காதுப்பறைகள் கிழிபட மோதி மோதி நம்முடைய இனத்தின் பெயரையே மறக்கச் செய்திருந்தன. நாம் யார் என்பதை யாராவது பரந்தமனம் படைத்த அயல்நாட்டுப் படிப்பாளிகள் சொன்னதை, 'ஓகோ அப்படியா' என்று நாம் முறிக்கின்ற சோம்பலுடன் சேர்ந்து கேட்கும் ஒலியாக எடுத்துக் கொண்டிருந்தோம். நாம் யார் ஏன்று சிந்திப்பதைக் காட்டிலும், யாரோடு இணைந்துக்கலந்து விடலாம் என்ற நினைப்பே மேலோங்கி நின்றது. இந்த ஆகாத போக்குக்குக் காரணமாக ஆங்கிலேய ஆதிக்கத்தைச் காட்டினர். எவருடனாவது சேர்ந்தாகிலும் ஆங்கிலேயனை ஒழித்துவிட்டால், அதற்குப் பிறகு ஆறஅமர நமது இனத்தைப்பற்றிப் பேசலாம் என்ற வாதம் வலுவாக அப்போது இருந்தது. அண்ணா அவர்கள் தமது அரசியல் வாழ்வைத் துவக்கியபோது, நெருக்கடியான அறுவைச் சிகிச்சைக்குத் தயாரானவர்கள்போல் தமிழர்கள் நடந்துகொண்டனர். 'இந்த ஆபரேஷன் மட்டும் வெற்றிகரமாக நடந்து உயிர்பிழைத்தெழுந்துவிட்டால், அதற்கப்புறம் எவ்வளவு புத்திசாலித்தனமாக வாழ்வேன் தெரியுமா? இத்தனைநாள் நினைக்கவே தவறியதைக் கூட, செயலில் செய்துகாட்டப் போகிறேன் பாருங்கள்' என்று ஆபரேஷனுக்குத் தயாரான மனிதன், பிழைத்தால் போதுமென்ற பரபரப்பில் நினைத்துக் கொள்வதைப் போல், ஆங்கிலேயன் அகன்றுவிட்டால், பிறகு நமது இனத்தின் மாண்புக்கு—அதன் பெருமைக்கு—எதிராக நிற்பவர் யார் என்று அறைகூவல் விட்டது தமிழ்ச் சமுதாயம்.

அறுவைச் சிகிச்சையும் வெற்றிகரமாக நடந்தது. ஆங்கிலேயனும் வெளியேறிவிட்டான். அதற்குப் பிறகு?

"ஆபரேஷன்வெற்றிபெருமலே நாம் செத்துப் போயிருந்தால் என்ன செய்வது? அப்போது செத்துவிட்டதாகவே நினைத்துக் கொண்டு இனி வாழ்ந்துக் கழித்து விடுவோம்" என்ற எதிர்பாராத நினைப்புக்குத் தமிழ்ச் சமுதாயம் தன்னை ஆட்படுத்திக்கொண்டது. இந்தப் போக்கைத் துணிச்சலாக எதிர்த்து நிற்பதில்தான் அண்ணா அவர்கள் புதுவரலாறு உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றை உருவாக்குவது எந்தச் சக்தி என்பதில் மாறுபாடு இருக்கிறது. கொள்கைப் போட்டியின் காரணமாகவே சரித்திரம் உருவாவதாக ஒப்புக்கொள்வது ஜனநாயகம். பொருளாதாரச் சக்திகள் இடம் பெயர்வதால்தான் சரித்திரம் உருவாவதாகச் சொல்வது கம்யூனிசம். மேற்கத்திய நாடுகளில், கம்யூனிசம் சாதிப்பதைப்போலவே சரித்திரம் உருவாக்கியிருப்பது உண்மைதான். ஆனால், கிழக்கத்திய நாடுகளில் பொருளாதாரச் சக்திகளைக் காட்டிலும், இனங்களின் தனித்தன்மை ஆழமாக வேரூன்றிவிட்டிருப்பதை அண்ணா அவர்களைப் போல் அதிகமாக யாரும் சிந்தித்தவர்களில்லை. கிழக்கத்திய சரித்திரங்கள் இன—மொழி அடிப்படையில் எழுதப் படுபவையாகும். தனி இனமோ கலப்பற்ற மொழியோ மேற்கத்தியநாடு எதிலும் இப்போது இருப்பதாக யாரும் அழுத்தமாகச் சொல்ல முடியாது. கிழக்கில், அசலைத்தவிர கலப்புக்கள் தனி இடத்திலேயே வைக்கப்படும். அமைந்துவிட்ட அரசாங்கத்துக்கு மதிப்பும் மரியாதையும் காட்டுவதற்குப் பெயரிடப்பட்ட "தேசியம்" மேற்கத்திய படைப்பு; பிறந்த மண்ணுக்கும் பெற்ற தாய் வாழ்ந்த சூழலுக்கும் தொழுகைசெய்து கிழக்கத்திய மக்கள் வாழ்வதற்குப் பெயர் தாய்நாட்டுப் பற்று. தாம் ஒப்புக் கொண்ட அரசாங்கச் சார்பில் உயிரையும் கொடுப்பது மேல் நாட்டின் நாட்டுப்பற்று; தமது மரபுக்கும்-தாய்மொழிக்கும் எதிரிகளாக யார் மாறினாலும் அவர்களை விரட்டியடித்துத் தங்கள் மண்வளம்—மனவளம் ஆகியவைகளுக்கு ஏற்றபடிதான் மதங்களையும் இங்கு உருவாக்கிக் கொண்டிருப்பது மரபு. தன் மொழி—நாட்டுப்பற்று ஆகியவைகளுக்கு சிறப்புச் சேர்க்காத மதங்கள்கூட கிழக்கில் வேரூன்றுவதில்லை. தமிழ்நாடு என்ற பெருமிதமான உணர்வைக் குறைக்கும் வகையில் அகில உலகத் தத்துவத்தைப் போதித்த பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் இங்கு அழிந்ததற்கும் இதுதான் காரணம். சைவமும் வைஷ்ணவமும் நாட்டுப்பற்று— மொழிப் பெருமை-அனைத்துக்கும் மேலாக அரசியல் கொள்கைகளில் தலையிடாத காரணத்தால்தான், அவை இங்கு வேரூன்றின. அதுவும் குறிப்பாக கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற தமிழ் நூல்களுக்குப் பிறதே அவை தழைத்தன.

பரவற்கொள்கை இந்தத் துணைக்கண்டத்திலேயே எந்த நாளும் வெற்றி பெற்றதில்லை. மனிதகுலத்தின் துவக்க கால உணர்வுகளை இன்னமும் பட்டுப் போகாமல் பாதுகாத்து வரும் தனித்தனி இனங்கள் நிரம்பியது இந்தத் துணைகண்டம். இவைகளில் ஒன்றுடன் ஒன்றை இணைப்பதோ, ஒன்றுக்கு மற்றவற்றை அடிமையாக்குவதோ யாராலும் முடியாததாகும்.

இந்த அடிப்படை உண்மைகளைத் தெரிந்துகொண்ட ஒரே தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தாம். மற்ற எந்தத் தலைவரையுங்காட்டிலும், அண்ணா அவர்களை இந்நாட்டு மக்கள் மொய்த்துக்கொண்டிருப்பதற்கும் இதுதான் காரணம். மேற்கத்திய முறைகளை இந்த மண்ணில் விதைத்துப் பயிராக்க முனைந்தவர்கள் பரிதாபகரமாகத் தோற்றிருப்பது அண்ணாவின் அறிவுரைகளைக் கேட்காததேயாகும். கிழக்கத்திய உலகில் தற்போது நேர்ந்துகொண்டிருக்கும் கொந்தளிப்புகள், அடிக்கடி ஏற்படும் அரசியல் மாற்றங்கள் ஆகியவைகளும் அண்ணா சிந்திக்கும் சிந்தனையை பின்பற்றாத காரணந்தான் என்பதை, வெகு விரைவில் உலகமே உணரத்தான் போகிறது.

இந்த உணர்வுகளை அகில உலகமும் பெறுவதற்காகவே அண்ணா அவர்கள் தி. மு. கழகத்தைத் துவக்கினார் என்று சொல்வதும் மிகைபடச் சொல்வதாகாது. தி. மு. கழகம் துவக்கப் பட்டபோது, இந்த நாடு எரிமலையின் உச்சியில் அமர்ந்துகொண்டிருப்பதான பீதியில் இருந்தது. பலாத்காரத்தின் மூலமாகவே அரசியலைக் கவிழ்த்து, மேற்கத்திய முறைகளை இங்கு திணிப்பதற்குக் கம்யூனிஸ்கள் முயன்று கொண்டிருந்தார்கள். இன்று இந்தியா அமைதியானதும்—நிலையானதுமான அரசியலைப் பெற்றிருப்பதற்குக் காரணம், அண்ணாவும் அவர் தோற்றுவித்த தி. மு. கழகமும்தாம் என்பதை வருங்காலச் சரித்திரம் விளக்கமாகவே எடுத்துச்சொல்லும் என்பது உண்மை. பெரியார் அவர்களிடம் அண்ணா வாதாடிப் போராடிப் பார்த்தும், ஆகாதவழியிலிருந்து தன்னைத் திருத்திக்கொள்ள முடியாது என்று பெரியார் அறிவித்துவிட்ட போது, கம்யூனிஸ்டுகள் தெலிங்கானாவில் தங்கள் கைவரிசையைக் காட்டிக்கொண்டிருந்தனர். சென்னைமாகாணச் சட்டசபையில் பெரும்பான்மை எண்ணிக்கையுடன் எதிர்க்கட்சித் தலைவர்களாக வீற்றிருந்தனர். காங்கிரசுக்கு அடுத்தபடி கம்யூனிஸ்டுகள்தான் என்ற நிலை நாட்டு அரசியலில் நிலவிற்று. அவர்களது பலாத்கார உணர்வையும் அராஜகப்போக்கையும் நன்குணர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் கூட, கம்யூனிஸ்டுகளைப் பற்றி பீதிகலந்த குரலில்தான் பேசிவந்தனர். இந்த நிலையில் முழு வளர்ச்சி பெற்றிருந்த திராவிடர் கழகத் தோழர்களில் பெரும்பாலோர், கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றியும் அதில் இணைந்துவிடுவதுபற்றியும் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

1949-ஆம் ஆண்டு வாக்கில், திராவிடர் கழகத்திற்கு இருந்த பலம், உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது காந்தியடிகளுக்கு இருந்த ஆதரவைக் காட்டிலும் அதிகமானதாகும். அந்தச் சக்தி முழுவதும் கம்யூனிஸ்டுகளிடம் சிக்கிவிட்டிருந்தால், நாட்டில் எத்தகைய கொந்தளிப்பு இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கும் என்பதை இப்போது நினைத்தாலும் நடுக்கங்கொடுக்கிறது.

காலனிஆதிக்க எதிர்ப்புணர்ச்சி அப்போதுமக்களிடம் புரையோடிப் போயிருந்ததால், வேறு எந்த வகையான ஆட்சிமுறை தங்கள் மீது திணிக்கப்பட்டாலும், ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் மக்களும் இருந்தனர். ஜப்பானில் அணுகுண்டை வீசியதன் காரணமாக அமெரிக்காவின் பேரில் ஆசிய மக்களுக்குச் சொல்லொணாத ஆத்திரம் அப்போது நிலவியது. எஞ்சி நின்றவை ருஷ்யாவின் "பாட்டாளி மக்கள் சாம்ராஜ்ய" கீதமும் அதற்குத் தரகர்களாக மூலைமுடுக்கிலும் பரவிக்கிடந்த கம்யூனிஸ்டுகளின் பசப்பு வார்த்தைகளும் - பயங்கரமுறைகளுமே! இனம்—மொழி—நாடு ஆகியவைகளை அழித்துவிடக்கூடிய கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களுக்கு எதிராகத் துணிந்து பேசுவதற்கே யாருக்கும் குலைநடுக்கம் ஏற்படக் கூடிய காலம் அது. அவர்களை எதிர்ப்பவன், ஏகாதிபத்தியக் கையாள்—பணக்காரர்களின் கூலி என்று வெகு சுலபமாக அப்போது மக்களே முடிவுகட்டிக் கொண்டிருந்தனர்!

இந்த நிலையில்தான், வடக்கில் பண்டித நேருவும், தெற்கில் அறிஞர் அண்ணா அவர்களும் கம்யூனிஸ்டுகளை எதிர்த்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற உறுதி பூண்டனர். 1949-இல் பண்டித நேரு, முழு ஜனநாயகத் தன்மையுடன் இல்லாவிடினும், கம்யூனிஸ்டுகளுக்கு பலத்தைக் கொடுக்காத அரசியல் சட்டத்தை நிறைவேற்றிக் காட்டினார்; அறிஞர் அண்ணா அவர்கள், இந்தநாட்டின் பண்புக்கேற்ற ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக்காக்கும் தி. மு. கழகத்தை உருவாக்கினார். நேருவின் ஜனநாயக ஆர்வம் இந்திய அரசியலைக் காப்பாற்றிற்று; அண்ணாவின் ஜனநாயக உணர்வு மக்களைக் கணநேர மயக்கத்திலிருந்து மீட்டு நிரந்தரமான சுதந்திரத்திற்குப் பழக்கிற்று.

கார்ல்மார்க்ஸ் இந்த உலகம் உள்ளளவும் புகழப்படுவதற்கு அவனுடைய மற்ற சாதனைகளைக் காட்டிலும், 'முதலாம் இண்டர்நேஷனல்' (முதன் முதலாக பாரி

அண்ணா கரம் பட்ட ஜனநாயகம் புதுப்பொலிவு பெறுகிறது !

கழகச் சட்டதிருத்தம் - அடைமழையில் ஏந்திய குடை!

சில் தோற்றுவிக்கப்பெற்ற அகில உலக பாட்டாளி மக்கள் மன்றம்) நிறுவியது ஒன்றே போதும் என்று சொல்வதுண்டு. அண்ணா அவர்களின் பெயர் சுதந்திர உலகச் சரித்திரத்தில் என்றும் ஒளிவிடுவதற்கு, அவருடைய மற்ற ஆற்றல்களைக் காட்டிலும், தி. மு. கழகம் நிறுவிய துணிச்சல் ஒன்றே போதும்!

தி. மு. கழகம் மட்டும் தோன்ருதிருக்குமாஞல், கானா, இந்தோனேஷியா, எகிப்து ஆகிய நாடுகளின் கேடு கெட்ட ஜனநாயகத் தன்மைக்கு நமது நாட்டு அரசியலும் இதற்குள் போய்விட்டிருக்கும். காங்கிரஸ் வகுப்பதுதான் இங்குள்ள ஜனநாயகம் என்ற பரிதாபத்திற்கு ஆளாகிவிட்டிருப்போம். தடைகளை உடைக்க முடியவில்லை என்ருலு', முறைகளைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது தி. மு. கழகந்தான் என்பதை நியாய புத்தியுள்ள யாரும் ஒப்புக்கொள்ளவே செய்வர். அதிகார ஆசையின் அடிப்படையில் எழுந்த அரசியல் அமைப்பல்ல கழகம். 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதை ஆதிக்கவாதிகளுக்கு இடைவிடாது உணர்த்தவும், தாங்கள் கொடுக்கும் குரல் நியாயத்தின் அடிப்படையில்—நேர்மையின் பின்னணியில் இருக்கவேண்டும் என்பதை மக்களுக்குப் போதிக்கவும் புறப்பட்ட மறவர்படைக் கூடாரமே அது. ஆட்சிமன்றத்திற்குத் தி. மு. கழகமே வலியச்சென்றது என்பதைவிட, ஆட்சிமன்றத்திற்குள் அது இழுத்துச் செல்லப்பட்டது என்பதே பொருந்தும்.

பண்டைநாள் புகழொளியில் வருங்காலம் வழி நடக்கட்டும்!

புதிதாகத் தங்கள் அதிகாரப் பிடிக்குள் அகப்பட்ட பெரியதொரு நிலப்பரப்பை மனம்போனபடியெல்லாம் ஆட்டிப்படைக்கக் காங்கிரஸ்வாதிகள் அளவுகடந்த உற்சாகத்துடன் துவங்கி விட்டனர். 'சத்தியமே வெல்லும்' என்று அரசுச் சின்னத்தின் அடியிலுள்ள வாசகங்களையும் மறந்து, அநீதியான போக்கே அரசியல் தந்திரம் என்ற முடிவுக்கு அவர்கள் கட்டுப்பாடாகத் திரும்பி விட்டனர். நாடெங்கும் பரவிவரும் அநீதிகளை எதிர்த்துப் போராடும் பொறுப்பை தி. மு. கழகத்தின் பேரால் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டதும், போராட்ட முறைகளுக்கு காந்திய வழியே சிறந்ததெனக்கொண்டார். காங்கிரஸ்காரர்களிடத்தில் இருக்கும் அதிகார பலத்தைப் பார்த்து காந்திய முறையைக் கைக்கொள்ளவில்லை. தன் நாட்டு மக்களே அநீதியை விதைக்கின்றனர் என்பதுதான் போராட்ட முறையைக் காந்திய வழியில் அண்ணா வகுத்த காரணம். காந்தியின் அகிம்சைப் போராட்டங்களால், ஆங்கிலேயன் ஒழிந்தானே இல்லையோ, அதனையே அண்ணா அவர்களும் கையாள்வதால் காங்கிரஸ்வாதிகள் "எல்லாம் சரியாகவே நடக்கின்றன" என்ற திருப்தியில் வாழ முடிகிறது. காந்திய முறை அண்ணாவைக் கவர்ந்திருக்காவிட்டால், இந்த நாட்டின் இப்போதைய அரசியல் நிலைமையே வேருக மாறியிருக்கும். அவரைத் தென்னாட்டுக் காந்தி என கழகத் தோழர்கள் அழைப்பதைக் கேலி பேசுவோர் இதனை உணரவேண்டும். இறுதியான தத்துவமெனக் கம்யூனிஸ்டுகள் முடிவு கட்டிவிட்ட பலாத்காரப் புரட்சியையே காந்தியப் பண்புகள் பொய்யாக்கிக் காட்டியிருக்கின்றன; துணியும் பலாத்காரத்துக்கு இடமின்றி, உள்ள உறுதியின் காரணமாகவே எதையும் சாதிக்கலாம் என்பதை மெய்ப்பித்து இருக்கின்றன. ஆங்கிலேயனுக்கிருந்த குணங்களைக் காங்கிரஸ் ஆட்சியாளர் பெற்றுவிட்ட போது, அண்ணா அவர்கள் காந்தியப் பண்பைக் காப்பாற்ற முன்வந்திருப்பது வரலாற்றுச் சிறப்புடையதே ஆகும்.

இந்தச் சிறப்பின் அடிப்படையில்தான், அண்ணா அவர்கள் தி. மு. கழகச் சட்டதிட்டங்களைத் திருத்தியிருப்பதையும் எடுத்துக்கொள்ளவேண்டும். இட்லருடன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்ட ஸ்டாலின் கோழையல்ல; கெய்சருடன் சமாதானம் பேசிய லெனின் போராடத் தெரியாதவனல்ல. புது வரலாறுகள் உருவாவதும் புதுச்சக்திகள் பிறப்பதுவும் இவைபோன்ற துணிச்சலான செய்கைகளால்தான். இந்திய ஒருமைப்பாட்டை அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பது, உலகத்திற்குப் புதியதொரு அரசியல் தத்துவமும், ஜனநாயகத்திற்கு வலுவானதொரு கேடயமும் கிடைப்பதற்கு வழி செய்ததாகவே வருங்காலம் சொல்லும். இப்போதுள்ள இந்திய ஒருமைப்பாட்டுணர்வு முழுமைபெற்ற தத்துவமல்ல; பலரும் விரும்பிப் பாதுகாக்க முனையும் ஒரு கொள்கையே. இந்தக் கொள்கையை நிலைநிறுத்தத் தாம் செய்ய வேண்டியதை அண்ணா அவர்கள் செய்து முடித்து விட்டார்கள். அண்ணா அவர்களின் தீர்க்கதரிசனத்தைக் காங்கிரஸ்வாதிகள் உணர்வதற்குச் சக்தியற்றுக் கிடப்பதால்தான், இந்தி மொழியை எல்லோர்மீதும் திணிக்கும் ஆணவப் போக்கில் முனைந்துவிட்டிருக்கின்றனர். அதிகார பலத்தின் காரணமாகவும், அண்ணா அவர்களே தனது இயக்கத்தின் சட்டதிட்டங்களைத் திருத்தியிருப்பதைக் கண்டும், ஒருமைப்பாடு எப்படியும் ஏற்பட்டே தீரும் என்று உறுதியாக அவர்கள் நம்புகின்றனர். இறுதிப்புரட்சி ஏற்பட்டே தீரும் என்ற அறுதியிட்ட நம்பிக்கையின் காரணமாகக் கம்யூனிஸ்டுகள், முடிவுகளைப்பற்றிக் கவலைப்படாமலே, அராஜகச் செயல்களில் எப்படி இறங்கி விடுகிருர்களோ, அதேபோல் ஒருமைப்பாடும் முடிந்துபோன விவகாரமாகக் காங்கிரஸ்காரர்கள் கருதி விட்டிருக்கின்றனர். அதனுல்தான் முறைகளைப்பற்றிக் கவலைப்படாமல், பண்பாட்டுணர்வுகளும் மொழிப்பற்றும் அவர்களால் அலட்சியப்படுத்தப்படுகின்றன. மேற்கத்திய முறைகளைக் கிழக்கத்திய பாணியில் ருஷ்யாவில் மகாபீட்டர் திணித்ததைப்போல், கிழக்கத்திய உணர்வுகளை மேற்கத்திய முறைகளால் அழிப்பதற்குக் காங்கிரஸ்காரர்கள் முனைந்துவிட்டிருக்கின்றனர்.

ஒருமைப்பாட்டுச் சரித்திரத்தைத் தாங்கள்தான் உருவாக்குவதாகக் காங்கிரஸ்வாதிகள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். புகழ் வாய்ந்த தத்துவ ஆசிரியன் ஹெகல் கூற்றுப்படிப் பார்த்தால், அண்ணா அவர்கள்தான் ஒருமைப்பாட்டுக்குரிய இலக்கணத்தையே இந்தி எதர்ப்புப் போராட்டத்தின் மூலம் வகுத்துக்கொண்டிருக்கிருர்கள். ஹெகல் தத்துவமும்—தர்க்கவாதமுறை என்று கம்யூனிஸ்டுகள் குறிப்பிடுவதும்—இதுதான்:

'சரித்திரத்தில் ஒவ்வொரு சிறந்த கருத்தும், அதற்கெதிரிடையான மற்ருெரு கருத்தைத் தோற்றுவிக்கிறது. இவ்விரு கருத்துக்களும் ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிப் போராடி, இறுதியாக இரண்டுக்கும் உடன்பாடான புதியதொரு கருத்தைத் தோற்றுவிக்கின்றன. இந்த மூன்ருவது கருத்தே முந்திய இரண்டைக் காட்டிலும் தெளிவானதும் பூரணமானதுமாக அமைந்துவிடுகிறது.''

இதுதான் சரியான தத்துவம் என்பதாகக்கொண்டே கார்ல் மார்க்சும் தனது தத்துவத்தைக் சிந்திக்கத் தொடங்கினுன். பின்னர் அவன் தத்துவம் வேருகிப் போனது வேறு விஷயம். இன்றளவும் உலக அரசியல் கொள்கைகள் ஹெகல் தத்துவப்படியே உருவாகிவருகின்றன.

இதன்படி, அண்ணா அவர்களின் திராவிடநாடு பிரிவினைக் கருத்தும், அதற்கு எதிரிடையான இந்திய ஒருமைப்பாடு கருத்தும் ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தன. இறுதியாக அண்ணா அவர்கள் விட்டுக்கொடுத்ததின் மூலம், இரண்டுக்கும் உடன்பாடான ஒரு கருத்துத் தோன்றவிருக்கின்றது. இப்படித் தோன்றப்போவதுதான் ஒருமைப்பாடு பற்றிய உண்மையான—தெளிவான—நிலையான கருத்தாக அமையப்போகிறது.

இந்திய ஒருமைப்பாடு என்பது, அடித்தளமே இல்லாது ஆகாயத்தில் அமைக்கப்பெற்ற உறுதி வாய்ந்த கோட்டை என்று இந்தியைத் திணிப்போர் கருதிக் கொண்டிருக்கிருர்கள். அதனுடைய பலம், தனித்தன்மை வாய்ந்த பல்வேறு இனங்களின் தாராளப் போக்கினுல் ஏற்பட்ட கூட்டுறவில் அடங்கியிருப்பதை யாரும் மறக்கக்கூடாது. வேற்றுமையில் காணப்படும் ஒற்றுமைதான் இன்றைய ஆட்சியாளரின் குறியாக இருக்கவேண்டும். இதைவிடுத்து இயற்கையான ஒருமையில் பகிர்ந்தளிக்கப்பட்ட உள்ளாட்சிக் கோட்டமாகத் தமிழகத்தை நினைப்பவர்கள் ஒருநாளும் நிம்மதி காண முடியாது. ஒற்றுமை பலபடியானது; வேற்றுமை பளிச்செனத் தெரியக்கூடியது. இந்த இரண்டையும் ஏற்றுக்கொள்வதுதான் ஒருமைப்பாட்டுணர்வின் இலட்சணம்; ஜனநாயகத்தின் இலக்கணம். வேற்றுமையே கிடையாது—கூடாது என்பது, "நான் பெண்ணின் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை'' என்று சாதிப்பதுபோன்ற பொய்ம்மையாகும். அதேபோல், "நான் இன்று ஒருமைப்பாட்டின் அவசியத்தை ஒப்புக்கொள்கிறேன்" என்று சொல்வது "நான் பிறந்ததும் அழுதேன்'' என்பதை சிரித்துக்கொண்டே அறிவிப்பது போன்ற உண்மையாகும். நமது இயற்கையான பண்பாட்டுடன், செயற்கையான ஒற்றுமையில் மனப்பூர்வமாக இணைந்து வாழ்வதற்கு அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

ஹெகல் தத்துவப்படி, சிறந்த கருத்தொன்று தனக்கு எதிரிடையான மற்ருெரு கருத்துடன் மோதி விவாதித்து, ஒரு உடன்பாட்டுக் கருத்தாக — தோற்றுப்போனதாக அல்ல — மாறியிருப்பதாகத்தான் காங்கிரஸ் ஆட்சியாளர் இதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒருமைப்பாட்டுக்கு உடன்பாடான கருத்தை அண்ணா அவர்கள் பிரகடனப்படுத்திவிட்டார்கள்! அண்ணா அவர்களின்

(15-ம் பக்கம் பார்க்க)

“அண்ணா வளர்த்த தமிழ்!”

சி. துரைச்செல்வம்



கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்'
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிர்இள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என் உயிர் என்பேன் கண்டீர்!

என தமிழை உயிரெனப் போற்றும் பரம்பரை அண்ணாவின் பரம்பரை! தமிழகத்திலே, இலக்கியத் துறையிலேயும், அரசியல் துறையிலேயும், பேச்சுத் துறையிலேயும், புதுமையைப் புகுத்திப் பழமையை அகற்றிய, தமிழ் மேதையவர்.

இலக்கியத் துறையில் அண்ணா தமிழகத்தில் புகுந்த வேளையில், இலக்கிய உலகிற்குச் செல்லும் பாதை, கற்களும், முட்களும் நிறைந்த, காட்டுப்பாதையாகவே காட்சியளித்தது! அப்பாதையில் அண்ணாவிற்கு முன்னே புகுந்தவர்கள் எல்லாம், தம் காலிலே தைத்த முட்களை முறித்துக்கொண்டும், சிலர் லாவகமாக அப்பாதை கடந்தும் சென்று கொண்டிருந்தனர். ஆனால் அண்ணாவோ தமிழ் இலக்கிய உலகிற்குச் செல்லும் வழிகிடந்து, தமிழுடன் தைக்க காத்துக்கிடந்த இந்தி, சமஸ்கிருத முட்களையும், ஆங்கில கற்களையும் கையில் பொறுக்கிக்கொண்டே வந்தவர்.

'தனித்தமிழ் தாள ஓசையென, அடுக்குச் சொல்லோடு. நாவிலே நாட்டியமாடும் புதிய நடையை முதன்முதல் தமிழகத்திலே ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான். 'அடுக்கு மொழி அண்ணா' என்ற பெயரைப் பெற்றவர்! ஆயிரமாயிரவர் அந்த அழகுத் தமிழ்நடையை பின்பற்றியே இன்று எழுதத் துவங்கியிருப்பது; தமிழ் உள்ளவரை, தமிழர் உள்ளங்களிலே அண்ணா தமிழைப் போல் வாழ்வார் என்பதற்கோர் எடுத்துக்காட்டே!

நாவல் எழுதுவதில் அண்ணாவுக்கு நிகர்? யாருமே கிடையாது! அவருடைய 'பாவையின் பயணம்', 'ரங்கோன் ராதா', பார்வதி பி.ஏ. போன்றவை, நல்ல தமிழ் நாவல்களாகும்.

“பொருந்தாத் திருமணம் செய்துகொண்ட சித்திரப் பாவையைப் போலவேதான் பதுமையும்! அவள் கணவன், அவ்வேல் விழியாளின் இளமை கண்டு அஞ்சி, அவளை அடிமைபோல், நடத்துகிறான்! இடையில் பதுமை ஒரு நாள் விதவையாகிறாள்! அவள் கணவனின் அண்ணன் மகன் பகை முடித்தான் பட்டத்திற்கு வருகிறான்! அவன் ஒரு காமப் பித்தன்! அந்தப் பாதகன் பகை முடித்தான், தன் சிற்றன்னையையே படுக்கை அறைக்கு அழைக்கிறான். அவள் தன் மானம் காக்க, கட்டாரியினை துணை கொள்கிறாள்......இங்கே அண்ணா எழுதுகிறார்.

“புவியோரே பெண்களின் வாழ்க்கைப் பாதையை கண்மூடித்தனமாய் அமைத்திடும் பெரியோரே! என் பாதை என்னை எங்கு கொண்டு செல்கிறது? என்பதைக் கண்டாவது, திருந்துங்கள்!” என்று எழுதுகிறார், பதுமையின் கடிதம் மூலம்.

எழுத்தா அது? பொருந்தாத் திருமணம் செய்து வைக்கும், புவியோருக்கு அண்ணா தரும் பகுத்தறிவு சவுக்கடி யல்லவா அது!

ரெங்கம்! அவள்தான், ரங்கோன் ராதாவின் தாய்! அவள் ஒரு விபச்சாரி! மயிர் நீப்பின் வாழா கவரி மான் என, கற்பு நெறி தவறாத, தமிழ்க்குலத்திலே உதித்த ரங்கம் விபச்சாரியா? என, அந்த வேசித்தாய் மீது நம்மால் கோபம் கொள்ள முடியவில்லை......அவள் வேசியானாள்! இல்லை, ஆக்கப்பட்டாள்! சூழ்நிலை! இதை அண்ணா விளக்கி எழுதும்போது, ஒரு கொடுமைக்கார கணவனை கண்டு கோபம் கொள்ளுகிறோம்!

தன் தாய் ஒரு விபச்சாரி! என்று மகனே சொல்லும்போது?

உன் தாய்? நண்பன் கேட்கிறான்.

என் தாய் என்று, நான் அவர்களைக் கூறமுடியாது! மகனே என்று அவர்கள் என்னை அழைக்கமுடியாது! அண்ணா என்று ராதாவும், ராதா என்று நானும் பகிரங்கமாகப் பேசிக் கொண்டால், பழமையின் பிடியிலே உள்ள இந்த பாழும் உலகம் தூற்றும், கேலி செய்யும். பரந்தாமா, நான் வேளாளர் குலம்! ராதாவின் தாயாகுமுன்பு, ரங்கம்மாள் வேளாளர் வீரராகவ முதலியார் மகள்! இப்போது ரங்கம்மாள் ஒரு விபச்சாரி, ராமசாமி நாயுடுவின் வைப்பு! ராதா ஒரு கதம்ப குலப்பெண்! விபச்சாரியின் மகள்!......என்று அண்ணாவின் எழுத்தைப் படிக்கும்போது கண்களைத் துடைத்துக் கொள்ளாத கல் நெஞ்சக்காரரே இருக்க முடியாது!

தமிழகத்திலே, கதையம்சத்தைப் பாதிக்காதவண்ணம் பிரச்சாரத்தைக் கைக்கொள்ளும் ஒரே நாவலாசிரியர் அண்ணா அவர்கள் தான்!

அதற்கோர் எடுத்துக்காட்டு தான் பார்வதி பி.ஏ.

கட்டுரை படிப்பதென்றால் 'போர்' என்று எண்ணி கட்டுரை படிப்பதையே நிறுத்திக்கொண்டு வந்த தமிழகத்தில் — இருமருங்கும் சர்க்கரைக் கூட்டி, இடையிடையே, கடுக்காய் வைத்தாற்போல், அண்ணா அவர்கள், அழகுச் சர்க்கரைக் கூட்டி, இடையிடையே கருத்துக் கடுக்காய் வைத்து, தமிழகத்தில் கட்டுரை நடையிலே புதுமை உண்டாக்கியவர்.

மேனாட்டுச் சாத்திரங்கள், தமிழ்ப்படுத்த வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் அண்ணாவின் “ரோமாபுரி ராணிகள்”

இதை ஆபாசம்! ஆபாசம்!! எனப் பேசித் திரிகின்றனர் பலர்! ஆனால் ஆபாசம் என்றால் என்ன?

ஒருமுறை, ஜார்ஜ் பெர்னாட்ஷா சித்திரக்கூடம் ஒன்றைப் பார்த்துக்கொண்டு வந்தார். கலையழகுக் கொண்ட படங்களை ரசித்துக் கொண்டே வந்த அவர் ஒரு இடத்திற்கு வந்தவுடன் அங்கே நின்று, அங்கு மாட்டப்பட்டிருந்த படத்தை உற்று நோக்கினார், அது ஒரு இளம் மங்கையின் நிர்வாணத் தோற்றம்! அப்போது அவருக்குத் தெரிந்த மங்கை ஒருத்தி, அவ்வழி வந்தாள். 'ஷா' நிர்வாணப் படத்தைக் கூர்ந்து கவனிப்பதைக் கண்டு, என்ன ஆபாசத்தை அப்படிப் பார்க்கிறீர்கள்?' என்று கேட்டாள் கேலியாக!

உடனே 'ஷா' சிரித்துக் கொண்டே, எதம்மா ஆபாசம்? உன் உள்ளத்திலே இருக்கிற ஆபாசத்தை அகற்றிவிட்டு இந்தப் படத்தைப் பார்! என்றார். கேட்டவள் தலைகுனிந்தாள்.

எனவே ஆபாசம் என்பது பார்க்கும் கண்ணைப் பொறுத்தும்,

கருத்தைப் பொறுத்தும்தான் அமையும்!

நாவல் உலகிலே இப்படி என்றால், நாடகத் துறையிலே அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு, நாடகங்கள், சங்கத் தமிழ் ,நாடகங்களுக்கு இணையானது என்று தமிழ்ப் பெரியார்களே போற்றும்வண்ணம் அமைந்தது!

காலஞ்சென்ற, மிகப் பெரும் சரித்திரக் கதை எழுத்தாளரான திரு. 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாவின் நாடகத்தைப் பார்த்துவிட்டு, தமிழ் நாட்டிலே இதோ ஒரு இப்சன்! இதோ ஒரு பெர்னுட்ஷா! என்று பாராட்டிக் கூறினர்.

திரைப்பட உலகிலே, அண்ணாவின் வருகை, இருள் கிழித்து ஒளி வழங்கும் ஆதவன் வருகையென அமைந்ததெனின் மிகையாகாது. காதல் உரையாடல் காட்சியில், 'பிரபோ' என்ற சொல்லை அகற்றிவிட்டு 'கண்ணாளா!' என்ற கனித்தமிழ்ச் சொல்லை திரை உலகிற்கு முதன் முதல் தந்தவர் அறிஞர் அண்ணாதான்!

இப்படி எழுத்துத் துறையிலே மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அண்ணா, பேச்சுத் துறையிலேயும் புதுமுறையை கையாண்டு, இந்நாட்டு டெமாஸ்தனிஸ்—சாக்ரடீஸ்! என்று அவர் உரையை கேட்டவர்கள் எல்லாம் உளம் உருகிக் கூறிடும் நிலையை உருவாக்கினர்.

இன்றைய நிலையில் அண்ணாதான் தலைசிறந்த பேச்சாளர் என்பதை எவரும் மறுக்க இயலாது! அவர் நாவசைவுக்கு நாடசையும் வண்ணம் சொல்லுவதில் வல்லவர் இவர்!

"விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற முப்பால் வகுத்த மூத்தவன் சொல்லுக்கு இலக்கணமாய் திகழக்கூடிய ஒரே தமிழ் மகன் அண்ணா!

புலவர் நாவிலே புரண்ட தமிழ் — பொது மேடையில் அண்ணாவின் நாவிலே நடம் புரிந்து வளம் பெற்றது!

தியாகராயர் கல்லூரியில், 8—8—51-ம் ஆண்டு 'சொல்லும்—பயனும்!" எனும் தலைப்பிலே அவர் ஆற்றிய சொற்பொழிவு; அண்ணாவின் இலக்கியப் புலமைக்கோர் எடுத்துக்காட்டாக அமைந்தது!

அதே ஆண்டு, சென்னைக் கடற்கரையிலே மேதின விழாவிலே அண்ணா ஆற்றிய உரை, மிகச் சிறப்பு வாய்ந்தது!

"இந்த நாட்டை அடக்கியாளும் சக்திகள், இன்று வாளும் வேலுமல்ல! துப்பாக்கிக் குண்டும் அணுகுண்டுமல்ல! ஆனல், அவை இரண்டையும் விட, வலிமை வாய்ந்தச் சக்திகளை வடநாட்டு முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்! அவை தராசும்—டெலிபோனுமே!

இப்படி, நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் காரணம் என்ன என்பதை தெளிவுடன் விளக்கிட வல்லவர் அண்ணா ஒருவர்தான்.

அண்ணாவின் முன்னால், எந்த தமிழ்ப் பேச்சாளரும், வெய்யிலிடை வைத்த விளக்காகத்தான் ஒளிவிட முடியும்!

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையும், பெருநாவலர் எஸ். எஸ். பாரதியாரும், அண்ணாவின் நாவன்மைக்கு ஈடு தர இயலாமற் போனவர்களே!

அண்ணாவின் அழகுத் தமிழ் உரையைக் கேட்ட திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்,

"......யான் பல நாட்களாகக் கேளாத திண்ணிய உரையைக் கேட்கும் வாய்ப்பை இன்று பெற்றேன்! திரு. அண்ணாதுரை அவர்கள் காட்டும் வழியைப் பின்பற்றினல் தமிழ் மேம்பாடு அடையும் என்பதில் ஐயமில்லை!;" என்று பாராட்டிக் கூறினர்!

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அண்ணாதுரை எனும் அண்ணல் தமிழை சிறக்கச் செய்வார் எனக் புகழ்ந்தார்!

ஒரு முறை, எழுத்தாளர் மாநாட்டிலே பேசிய அண்ணா சொன்னர் :

"எழுத்தாளராகிய நீங்கள் காகுந்தலைப் பற்றி எழுதவேண்டியதில்லை! கர்னாட்டிக் மில்லிலே ரத்த வேர்வை சிந்துகின்ற தொழிலாளிகளைப் பற்றி எழுதுங்கள்! மிதிலையிலே உள்ள ஜனகனின் மாளிகையைப்பற்றி எழுத வேண்டியதில்லை! ஆலையிலே வேலை செய்பவர்களுடைய ஓலை குடிசையைப் பற்றி எழுதுங்கள்! அசோக வனத்தில் சீதை விட்ட கண்ணீரைப் பற்றி எழுதவேண்டியதில்லை. ஆலமரத்தடியிலும், அரசமரத்தடியிலும் காய்ந்து கருகும் கருப்பாயியைப் பற்றி எழுதுங்கள்!"

என பல கோணத்திலேயும் இருந்து தமிழகத்தைப் படம் பிடித்து விளக்கிக்காட்டி, எழுதச் சொன்ன தமிழ் மேதை அண்ணா அவர்கள்தான்!

இப்படி, அல்லும் பகலும் தன் வலிமைமிகுப் பேச்சாலும், வளமான எழுத்தாலும் தமிழ்வளர்த்த பெரியவர் அறிஞர் அண்ணா!

தமிழும், தமிழகமும் அண்ணா அவர்களிடம் பெற்றதை விட, இன்னும் பெறவேண்டியது எவ்வளவோ உள்ளது!

தமிழ்த்தாய் தன் தலைமகன் அண்ணாவை நம்பித்தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிருள்!

அ-ண்-ணா என்ற மூன்றெழுத்தும்,

த-மி-ழ் என்ற மூன்றெழுத்தும் பின்னிப் பிணைந்தவை!

தமிழ் உள்ள அளவும் அண்ணா வாழ்வார். தமிழர் உலகே அண்ணாவின் பொன்னாளாம்—இன்று புது மலர்த் தூவி வாழ்த்துகிறது!

நாமும் வாழ்த்துவோம்!

வாழ்க அண்ணா!

வீழ்க இந்தி!!

○

6-ம் பக்கத் தொடர்ச்சி

கதை படிக்கின்ற நாமுமே அந்த உணர்வைப் பெறுகிறோம், எங்கோ ஒரு மூலையில் நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சிதானே என எண்ணி!

"என்னை மூன்று பேய்களிடம் ஒப்படைத்துவிட்டு, உன் அப்பா தங்கத்திடம் தன்னை ஒப்படைத்து விட்டார்...பைத்தியக்காரி! பேயும் கிடையாது பூதமும் கிடையாது, லாசரஸ் டாக்டர் சொல்கிறது போல எல்லாம் நரம்புக்கோளாறு மேலும் மனிதர்களின் சுபாவத்தைக் கெடுக்க மனிதரே போதும். அந்தக் காரியத்தைச் செய்வதற்கு பேய் ஒன்றும் தேவையில்லை.

இத்தகைய சொற்களையும், விளக்கங்களையும், கையாண்டு பழமை விரும்பிகளின் மனதைப் புண்படுத்தாமல் படிக்கின்றவர்களை சிந்திக்க வைக்கின்ற முறை நேர்த்தியானது,

மந்திரக்காரனின் மாயவலையில் வீழ்ந்து கொலைக்காரனுகி நிற்கும் தன்னுடைய கணவனை—அவன் தனக்குச் செய்த கொடுமையை மறந்துவிட்டு, தானே கொலைகாரியாகி கணவனை விடுவித்து தன்னுடைய வாழ்க்கையை தியாகம் செய்துகொள்வதின் மூலம், தமிழ் நாட்டுப் பெண்களின் பெருமையை உயர்த்திவிடுகிருள் ரங்கம்.

நமது நாட்டுப் பெண்கள் கணவனுக்காக எத்தகைய தியாகத்தையும், செய்ய தயங்கமாட்டார்கள் என்பதையும்—ஒரு 'சிறந்தப் பெண், நெருக்கடி மிகுந்த நேரங்களில் ஆணின் தைரியம் வரப்பெற்று, அரிய பெரிய காரியங்களையும் மிகச் சாதாரணமாகச் செய்துவிடுகிருள் என்பதை ரங்கம் நிரூபித்து விடுகிருள்.

பரமன்—ராதா கலப்புத் திருமணத்தோடு இன்ப முடிவாக முடிக்கின்ற கதாசிரியர், எத்தகைய சுவையோடும், சுறுசுறுப்போடும், ஆரம்பிக்கிருரோ, அதே சுவையை நூலெங்கும் பரப்பி—'இன்பமே! என்றேன் நான். கண்களை ஒரு முறை மூடித்திறந்தாள். செந்தாமரை மலர்ந்தது, அருகே வந்தாள் வசந்தம் வீசிற்று! புன்னகை புரிந்தாள், புது விருந்து உண்டேன்—என அழகாக, சொற்செட்டோடு சுவையுடன் முடிக்கும் 'ரங்கோன் ராதா' ஒன்றே போதும் அண்ணா ஒரு தலைசிறந்த நாவலாசிரியர் என்பதை நிரூபித்துக்காட்ட.

எந்த நோக்கத்தோடு படைக்கப்பட்டதோ அதே நோக்கம் படைப்பாசிரியன் வாழ்நாள் காலத்திலேயே வெற்றி பெற்று விடுவது பெருமைக்குரியதுதான் — என்று சிறந்த நாவலொன்றை எழுதிய தலைசிறந்த நாவலாசிரியனைப்பற்றி மிகச் சிறந்த 'விமர்சகர் ஒருவர் எழுதிய வாக்கியம் அண்ணாவின் ரங்கோன் ராதாவுக்கு அட்சரசுத்தமாகப் பொருந்தி வரும் என்பது உண்மைக்கு மாறுபட்டதல்ல.

○

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம்ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.
●
தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

அண்ணா வழி செல்வோம்! அறப்போரில் வெல்வோம்!!



கீழ்திசை அடிவானத்தில் உதயசூரியனின் ஒளிக்கதிர்!

அதே நேரத்தில் உலகெல்லாம் 'வாழ்க'வென்று கூறும் பறவை இனம் வானகத்தே பறந்து செல்லும் அழகான காட்சி!

கோழிக் கூவலின் ஓசைகேட்டு கூட்டம் கூட்டமாக கலப்பை ஏந்தி செல்லும் உழவர்க்கூட்டம்!

நஞ்சை வயலில் கணவனோடு துணையாக நஞ்சை நடவுக்கு படைகொண்ட பெண்மணிகளின் வயலோரத்து அழகு நடை!

இத்தனை எழிலுக்கும் சிறப்பாக அன்று காலண்டரைப் பார்க்கும் போது, தேதி 15; மாதமோ செப்டம்பர்! ஆமாம் அன்றுதான் தமிழக சொத்து! தென்பாண்டி முத்து! நல்லியல் முரசு! நம் நாட்டு மொழியரசு! தென்னவர் பாசறை! திராவிடர் தலைவர். செந்தமிழ் வேந்தர்! சிந்தனைச் செல்வர்! பேரறிவாளர்! கன்னித் தமிழின் தங்கம்! காஞ்சியளித்த சிங்கம் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள்!

இயற்கையில் கோலங்கள் நித்தம் நித்தம் மாறிக்கொண்டே இருக்கும்! இது அன்றாட நாம் கண்டு கொண்ட உண்மை! ஆனால் நல்லவர்களும், தியாகசீலர்களும், பகுத்தறிவாதிகளும் இந்த மாநிலத்தே தோன்றிய நேரம், வருடத்தில் ஒரு முறைதான் வந்துபோகும்! அவர்களின் தியாகத்தைப் பாராட்ட நமக்கு கிடைக்கும் வாய்ப்பு வருடத்தில் ஒரே ஒருநாள்! அந்த ஒரு நாளில் நாம் செய்து கொள்ள வேண்டிய தீர்மானங்கள், நாம் செயல்படவேண்டிய காரியங்கள்—நாம் செய்துகொள்ளவேண்டிய சபதங்கள், நாம் செயல்பட வேண்டிய கடமைகள் எத்தனையோ எத்தனை!

காஞ்சி தந்த கடமையின் காவலரை நினைக்கும்போது அவர் பிறந்த நாள்—நாம் கொண்டாட வேண்டிய நல்லதோர் திருநாளாகும்! குறள்நெறி மாறாத 'குணக்குன்றுபோல் நமக்கு கிடைத்த ஒரே ஒரு தானைத்தலைவர்! அந்த தலைவரை பார்க்கும் நேரத்திலும் அவர் சொல்லும் பகுத்தறிவு கோணங்களை நினைக்கின்ற நேரத்திலும் நமக்கு தோன்றுவதெல்லாம் நாளைய உலகம் நமக்காக என்பதுதான்!

பிறந்தோம்! வளர்ந்தோம்! இந்த மாநிலத்தை பெருமை படுத்த காளையர் அனைவரும் கைகோர்த்து நின்றோம்! நமக்கு வேலைவரும் நேரமெல்லாம் நம்மை கட்டிக்காக்கும் கருத்துறைக்கு கட்டுப்பாடு தந்து கொண்டே இருப்பவர் ஒரே ஒரு வராகத்தான் இருக்கமுடியும்; அந்த ஒரே மனிதரை நினைக்கும் போது கழகத்தின் காவலர் அறிஞர் அண்ணா என்றுதான் இதயத்தின் அடிபீடம் சொல்லிக் கொண்டே இருக்கிறது!

எத்தனையோ பகுத்தறிவுவாதிகள் இந்த தமிழகத்தை சீர்படுத்த கஷ்டத்தை அனுபவித்து கடைசியில் உயிர் கொடுத்த உத்தமர்களாக மாண்டு போனார்கள்! ஆனால், அவர்கள் இருக்கும் போது எதையுமே செயல்படுத்தாத சில சுயநலவாதிகள், இன்று இறந்த மாணிக்கங்களுக்கு மணிமண்டபம் கட்டுகிறார்கள்! சிலையமைக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள்! விலைகொடுத்து வாங்குவதுபோல் இறந்த மனிதர்களுக்கு பிறந்த நாளை கொண்டாடிவருகிறார்கள்!

ஆனால் திராவிடத்தில் துணிவு கொண்ட மனிதர்களில். பிறந்த நாளை புனிதப்படுத்த நாம் கொண்டாடுகிறோம், அறிஞரின் பிறந்த நாளை! கொண்டாட்டம் மட்டும் இருந்துவிட்டால் போதுமா? நம் கண்ணோட்டம் எப்படி என்பதை செயல்படுத்தி காட்டவேண்டும்! அந்தச் செயல் மற்றவர் காணும் சிந்தனைக் கருவூலமாக இருக்க வேண்டும்.

அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளைக் கொண்டாடும் போது அவர் வழி வகுத்த முறைகளில் நாமும் பங்குகொள்ள வேண்டும்! சிறை சென்றார்! இம்மாநிலம் வாழ தனது முழு நேரத்தையும் செலவு செய்கிறார்! அவர் செய்யும் கழகப் பிரச்சாரம்—கடமையின் சித்தாந்தம்! இவைகளை எல்லாம் நம் எண்ணங்கள் சூழ்ந்துகொண்டே இருக்கவேண்டும்!

இப்போதுதான் கொடுஞ்சிறையிலிருந்து விடுதலையானார் நமது இந்தி எதிர்ப்பின் படைத்தலைவர்! அவர் சிறையிலே அவதி கொண்டதை கழகத்தின் ஏடுகளில் தொடர்ச்சியாகக் கண்டோம்! அத்துடன் கழகத்தின் காவலர் சிறைவிட்டு வந்த நேரத்தில் நமது கண்ணீருக்கு இலக்கணமாய் இருப்பதையும் நாம் கண்டு கொண்டே இருக்கிறோம்! அவர் பேச்சுக்கு மூச்சு. இப்போது பேச்சாக உருவெடுப்பது இந்தி எதிர்ப்பு! எத்தனையோ காளையர்களை சிறைக்கு அனுப்பிய நமது கழகத்தைப் பார்த்து இன்னும் சிரித்துக்கொண்டே இருக்கிறாள் இந்தி அரக்கி! அவளுக்கு பக்க மேளம் வாசிக்க பல சுயநலவாதிகள்! அதற்கு ஆமாம் சாமியாக சில துரோகிகளின் ஆர்ப்பாட்டம்!

இதையெல்லாம் துச்சமாக மதித்து செயல்பட துடிப்பதுதான் அறிஞர் அண்ணாவின் இதயம்! அந்த இதயத்திற்கு நாம் செய்ய வேண்டிய சிறப்புக்கள் எது தெரியுமா? மொழி காக்க காவலர் சென்ற பாதையை நாமும் தொடர்ந்து செல்லவேண்டும்! அவர் பிறந்த நாளை அடுத்த ஆண்டில் திராவிடர் திருநாளாக்க வேண்டும்! அதற்காக நாம் செய்து கொள்ளவேண்டிய "சபதம்" ஒன்றுதான்! அந்த சபதமே நமது தலைவருக்கு நாம் தரும் பிறந்த நாள் பரிசு! அதுதான் மொழி காக்கும் படையில் நாமும் நலம் காக்க சேரவேண்டும்! அறிஞர் அண்ணாவின் வழி காக்கும் தமிழுக்கு நாம் உயிர் கொடுக்கவும் தயாராக வேண்டும்! அந்த உணர்ச்சி வெள்ளத்தில் நாளை நமக்கு கிடைக்கப்போவது?

வெற்றி! வெற்றி!! அந்த வெற்றியைக் கொண்டாட நினைக்கும் போது அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள்!

நமது தாயகத் திருநாள்!

இந்தத் தமிழகப்பெருநாள்!

அதுதான் திராவிடர்திருநாள்!

ஆரூர். அன்புத்தம்பி

○

ஆங்கிலமும் இந்தியும்

——[0]——

இவ் விந்தியதேயத்தின் மட்டுமேயன்றி இவ்வுலகம் எங்கணும் அழுந்திப் பயிலவும், பேசவும், வழங்கவும் பட்டு வரும் ஆங்கிலமொழி யொன்றே உலக முழுமைக்கும் பொது மொழியாய்ப் பரவிவருதலால், அது தன்னையே நம் இந்துமக்கள் அனைவரும் பொது மொழியாய்க் கைக் கொண்டு பயிலுதலும் வழங்குதலும் அவர்கட்கு எல்லா வகையான நலன்களையுந் தருவனவாகும். முதலில் உலகியல் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள் கடைக்கூட்டு தற்கு எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும், அத் தொழில் நுட்பங்களை நன்கறிந்து செய்தற் குதவி செய்யும் பல்லாயிரக் கணக்கான தொழிலறிவு நூல்கள் ஆங்கில மொழியிலன்றி வேறெதிலேனும் இருக்கின்றனவா? பல்வகைக் கைத்தொழில்களைப் புரியுங்கால், அவற்றிற்கு வேண்டும் பல்வகைப் பண்டங்களைப் பல நாடுகளிலிருந்துவருவித்தற்கும், அவற்றால் தாஞ் செய்துமுடித்த பண்டங்களைப் பல நாடுகளிலும் உய்த்து விலைசெய்து ஊதியம் பெறுதற்கும் ஆங்கில மொழியேயன்றி வேறேதுந் துணை செய்யுமோ? செய்யாதே. இன்னும் உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கில மொழியின் உதவி கொண்டே நன்கு நடைபெறுதலை அறிந்துவைத்தும், அதனைப் பொது மொழியாக வழங்குங்கால், விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்படாத இந்தியைப் பொதுமொழியாக்க முயல்வோர் நம்மனோர்க்கு உண்மையில் உதவி செய்பவர் ஆவரோ? கூர்ந்து பார்மின்கள்!

○

- மறைமலையடிகளார்

"அண்ணாவின் முத்துச்சரம்!"

பாமர மக்கள் பாராளும் காலம்!

'பாமர மக்கள் பாராளும் காலம் இது!' என்று பாடினார் கவி இக்பால். புலிவேடம் போட்டோர் முன், எலிபோலும் முயல்போலும் அடங்கிக் கிடந்த மக்கள், விழித்தெழுந்தால் இந்நிலை நிச்சயம் ஏற்பட்டே தீரும். அதிலும் மகத்தான போர்களுக்குப் பிறகு மறுமலர்ச்சி தோன்றுவது வரலாற்று உண்மை.

அணுக்குண்டும் அறிவுக்குண்டும்!

அணுக்குண்டு கண்டு உலகம் அதிசயிக்கிறது; ஆனால் அச்சமுமடைகிறது; அதன் அழிவுச்சக்தி என்னென்ன கேடு தருமோ என்று! ஆனால் அதே விஞ்ஞான அற்புதத்தை நன்னெறியிலே பயன்படுத்தினால், பலன் ஏராளம் என்று கூறுகின்றனர். சந்திர மண்டலம் சென்று வரலாம் என்றார் ஓர் விஞ்ஞானி! விஞ்ஞானம் அறிவின் விளைவு. அறிவு, ஆக்க வேலை அழிவு வேலை இரண்டுக்கும் பயன்படும். பொது நலம், சுயநலத்தை அழித்தொழித்தால் அறிவும் அதன் கூறான விஞ்ஞானமும், அதன் விளைவுகளான புதிய புதிய கருவிகளும் அழிவு தராமல் நன்மை பொழியும்.

பொதுநலம், பாட்டாளி ஆட்சியிலேதான் மலரமுடியும். அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே உழைப்பு ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும், விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும். அணுக்குண்டு கண்டு அஞ்சும் உலகு இன்று, அதே சமயத்தில் பல்வேறு இடங்களிலே, அறிவுக்குண்டு வீசப்பட்டுக் கொடுமையும் மடமையும் ஆணவமும் அறியாமையும் அழிந்துபடுவது கண்டு மகிழ்கிறது. அணுக்குண்டின் அட்டகாசத்தைக் கண்டு மனித அறிவு அழிவுக்காகப் பயன்பட வேண்டுமேன்று வெறுப்படையும் அன்பர்களுக்கு இது கூறுவோம்; அறிவினால் ஆகாதது ஒன்றில்லை.

வேங்கைக்காட்டை நரி யாள்கிறது

வலியோர் எளியோரை வதை புரிவதா, இதனை ஒழிக்கக் கொலைவாளை எடடா என்று கூறுகிறார் கவி. இங்கோ! வலிவற்றவர் வலிவுள்ளவரை வதை புரிகிறார். வீரரைக் கோழைகள் ஆட்சிபுரிகிறார்கள். புல்லாயுதம் வாளாயுதத்தை அடக்குகிறது. வலியோர் எளியோரை வாட்டுகின்றனர். —வேங்கைக் காட்டிலே நரியாளும் இந்த விந்தையைவீரரை வீணர் வீழ்த்தும் இந்த விபரீதத்தைக் கண்டு என்ன கூறுவது? எண்ணுங்கள்! எண்ணி ஏங்காதீர்; ஏக்கத்தோடு தூங்கிக் கிடக்காதீர். கண்களிலே நீர் ததும்பினால் துடைத்து நின்று, தாமதம் செய்யாமல் துரிதமாக வாரீர்! விபரீதம் முற்றுமுன், இனம் அழியுமுன், நாடு காடாகுமுன், இதுவே தருணம்.



தென்னகத்தின் தனிப்பெருந் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி கூறியுள்ள கருத்துக்களைப் படையலாக்கித் தந்துள்ளார் தோழர் அன்புப்பழம் நீ!

ஏழையின் செல்வமே மாதவன் மகுடமுடி

பக்தர்கள் அறிய மாட்டார்கள், தன் வாழ்வுக்கு வழி செய்யும் வள்ளலைக் கண்டதும் ஏழையின் முகத்திலே மின்னல் வேகத்தில் தோன்றிடும் ஆனந்த ஒளியை! மரணப்படுக்கையிலே கணவன்! மாரடித் தழுகிறாள் மனைவி! குடித்துவிட்டுக் கூத்தாடுகிறான் மகன்! "மருந்துண்டு பணம் தேவை" என்று கூறுகிறார் மருத்துவர். கையிலோ காசு இல்லை. கடன்பெற ஒரு வழியும் தெரியவில்லை. யாரிடம் சென்று கெஞ்சினாலும் கூறப்படும் பதிலோ, "போ! இதென்ன தொல்லை?" என்பதுதான். இந்த நிலைமையிலே தந்து பாருங்கள் அந்த அம்மைக்குப் பணம்!

எதிர்பாராத உதவி பெற்றதும், அந்த அம்மையின் கண்களிலே கூத்தாடும் திருப்தியின் திரு உருவான ஒளியைக் காணுங்கள். மகுடத்திலே புதைக்கப்பட்டுள்ள கல் கக்கும் ஒளி, மங்கலாகத்தான் தெரியும், அந்த மாதின் விழி விடு ஒளிமுன்! நிம்மதியான வாழ்வு கிடைக்கப்பெற்ற குடும்பத்திலே காணப்படும் களிப்பின் ஒளிக்குத் துளியும் ஈடாகாது— அந்த வைர முடியின் ஒளி!

ஆனால் அத்தகைய நிம்மதி, திருப்தி, களிப்பு, வாழ்க்கை ஒளி இல்லாத இல்லங்கள்தானே அநேகம். ஈரமற்ற நெஞ்சினர், இறுமாந்த இயல்பினர், இல்லாதாரைக் கொல்லாதது ஒன்றுதான் குறையே தவிர, மற்றெல்லாக் கொடுமைகளையும் செய்துதானே வருகிறார்கள். அந்த குன்றிக் கிடக்கும் குமுறும் நெஞ்சத்தினர், பசித்த உள்ளத்தினர், குழி விழுந்த கன்னத்தினர், எலும் புருவத்தினர், ஏக்கமுற்ற வாழ்வினர். குடிசைகளிலே குற்றுயிராகக்கிடக்கும்போது ஏழை இனம் எலும்பு முறியப் பாடுபட்டு வளரச் செய்த செல்வம், இங்கே மலைமேலுள்ள மாதவன் தலையிலே மகுடமாகிவிட்டது. அங்கே இருள் சூழ்ந்து இடர் மிகுந்து, கோடிக்கணக்கிலே மக்கள் கோவெனக் கதறவும், சக்தியற்றுக்கிடக்கவும், இங்கே இறைவனின் சிரத்திலே ஏறிக்கொண்டிருக்கும் எரி நட்சத்திரங்கள், எத்தருக்கு இரையாகும் இத்தகைய ஏமாளிகளும் உள்ளனரே என்று கூறிச் சிரிக்கின்றன. கலம் கவிழுமோ என்று கலக்கம். அந்தச் சமயத்திலே அலை அலைபோலக் கிளம்பி, மடிந்து மடிந்து மணலைத் தழுவும் காட்சியைக் கண்டு களிப்பவன், கலத்திலே இருப்பின், அவனை எந்த இனத்திலே சேர்ப்பது!

அதுபோலன்றோ இருக்கும் ஏழை மக்களின் வாழ்க்கையிலே —எரிமலை கக்கும் நெருப்பென— இல்லாமை, போதாமை, கிடைக்காமை எனும் கொடுமைகள் புகுந்தழிக்கும் நேரத்தில், இவ்வளவு ஏழை மக்களின் உழைப்பால் உயர்ந்தவர்கள், இகத்தின் இன்பமட்டுமென்ன, நமக்குள்ள செல்வத்தால் பரத்தின் பாகுரசமும், விலைக்குப் பெறமுடியும் என்ற மமதையின் பாதமார்க்கெட்டிலே —தலங்கள் என்ற தரகுக்கடை சென்று காணிக்கை எனும் விலை தந்து, அருள் எனும் சரக்குப் பெறுவதும், அந்த அருள் நாடிகளின் பணத்தால் அழகான வைரமுடி தயாராவதும், அது ஆண்டவனின் சிரத்துக்கு அணியாகி ஒளிவீசிடச் செய்வதும், அதைக் கண்டு அன்பர் கூட்டம் ஆனந்தமடைவதுமான காட்சி இருக்கிறது. துள்ளி விளையாடும் புள்ளிமானைக் கொன்றன்றோ தோல் தயாரிக்கப்படுகின்றது என்று எண்ணாமல், மான்தோல் பூஜா காரியத்துக் கேற்றது; புனிதவானுக்கு உகந்தது என்று கூறிடும் மக்களன்றோ இங்குளார்! அவர்கள் முடியின் ஒளிகண்டு பக்தி முழக்கமிடுவதிலே ஆச்சரியம் இல்லை! வைரத்தால் முடி அவருக்கு! அவருடைய அடியார்களுக்கு கற்றுக்கொடுக்கப்படும் மொழியோ, "காயம் பொய்! காற்றடைந்த பை! பிறந்தார் இறப்பர் முடிவிலே! யாவும் ஒரு பிடி" என்பதாகும் எவ்வளவு குருட்டுக் கொள்கை! எத்தகைய இருட்டு அறை! மதியை மருட்டும் சிறை!

தோழமையா? பகைமையா?

விந்திய மலையிலிருந்து குமரி வரை எந்தக் காலத்திலும் வடநாட்டார் ஆதிக்கம் செலுத்தியதில்லை. சந்திரகுப்தன் காலத்திலும் இல்லை. கனிஷ்கன் காலத்திலும் இல்லை. அவுரங்கசீப்பால் கூட விந்தியமலைக்கு இப்பால் வரமுடியவில்லை! இவர்கள் ஆண்டதெல்லாம் விந்திய மலைக்கு அப்பால்தான். படையெடுப்புகளும் அப்படியே. அவைகளும் முறியடிக்கப்பட்டிருக்கின்றன. தசாவதாரம் என்றால் உங்களுக்கு நன்கு தெரியும். தசாவதாரத்திலே இரண்டே இரண்டு அவதாரங்கள்தான் மனித அவதாரம் எடுத்தது. அந்த இரண்டு அவதாரங்களுங்கூட விந்தியமலைக்கு அப்பால்தான் எடுத்தன. தமிழர்களுக்கு இரண்டுதான் தெரியும்: ஒன்று தோழமை; மற்றொன்று பகைமை. இவை இரண்டும் தவிர, தமிழர்களுக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால் தமிழகத்தைத் தாக்கிப் பேசிய வடநாட்டாரைத் தமிழர்கள்தான் பணியச் செய்திருக்கிறார்கள்.

வாழ்க்கை இன்பம்

வீணையிலிருந்து நாதம் பிறக்கும். மலரிலிருந்து மணம் தோன்றும். காதலிலிருந்தோ எல்லாம் தோன்றுமல்லவா?

மலர் இருப்பது மணம் நுகர, கனியிருப்பது ரசம் பருக, வாழ்க்கையிலிருப்பது இன்பக்கேணியில் குளிக்க.

ஆன்றோர் என்ற சாக்கு

உருவமற்றவனுக்கு உருவமைப்பதும் உலக ரட்சகனுக்குப் பட்சணமிடுவேன் என்ற பிச்சுப்பிள்ளை விளையாட்டில் ஈடுபடுவதும், அறிவு வளர்ச்சிக்கு அறிகுறி யாகாது. ஆன்றோர் வழிபட்டனர். அடியேனும் அவ்வண்ணமே என்றுரைப்பது விஷய விளக்கமுமல்ல; வாதமுறையுமல்ல! ஆன்றோர் ஆன்றோர் என்று உச்சத்தைத் தேடிப் பார்ப்போமானால், உச்சிக்கிளையிலே உட்கார்ந்து கொண்டு, மச்சுமீது உலாவுவோரைக்கண்டு சேட்டை புரியும் குரங்கினிடம் போய்ச் சேரவேண்டி நேரிடும். மனிதனுக்கு ஆதித்தந்தை (மூலவர்) குரங்கு என்பது டார்வின் தத்துவம். எவரும் அந்நிலை பெற நினையார்! எனவே, ஆன்றோர் என்ற சாக்குமொழியை விட்டு, அறிவு எனும் மெய்ந்நெறி நின்று—மேதினியின் மற்றப்பாகங்கள் எவ்வளவோ முன்னேறியிருக்க, இங்கு மட்டும், மடமை மதமாகவும், சேட்டை சடங்காகவும், வேடம் வைதீகமாகவும் இருப்பது சரியா? முறையா?

வாழ்க பெரியார்!



பகுத்தறிவியக்கத்தைத் தோற்றுவித்து அரும்பணியாற்றிய மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள், தமது வாழ்க்கைப் பயணத்தில் 85-ஆண்டுகளைக் கடந்து 86-வது ஆண்டுப் பயணத்தை செப்டம்பர் 17-ம் நாளன்று துவக்குவது குறித்து பெருமகிழ்ச்சியடைகின்ருேம்.

பெரியார் அவர்களின் தற்போதைய அரசியல் கொள்கைகள் நமக்கு மிகவும் வேறுபாடுடையதாயினும், அவர்கள் தமது பொதுவாழ்வில் ஆற்றியிருக்கும் அருஞ்சேவைகளுக்கு நமது நன்றி என்றென்றும் உரித்தானதாகும்.

என். வி. என்.

அண்ணு பிறந்தார்! தொடர்ச்சி

கொள்கைக்கு எதிரிடையாக இத்தனை நாளும் இருந்தவர்கள் எந்த வகையில் அவரிடம் உடன்பாட்டுக்கு வரப்போகிருர்கள்?

இந்திமொழித் திணிப்பு அவர்கள் உடன்பாட்டுக்கு வருவதைக் காட்டவில்லை. ஒருசார்பு உடன்பாடு உருப்படியான விளைவுகளை, சரித்திரநியதிப்படி, உண்டாக்க முடியாது. இவர்கள் ஒற்றுமைக்காகவே ஒற்றுமையைப் பேசுகிருர்களா? ஒரு சார்பு ஆதிக்கத்திற்காக ஒற்றுமை வாதத்தை ஒரு கேடயமாகப் பயன்படுத்துகிருர்களா? இவைகளுக்குச் சரித்திர பூர்வமான விடைகாணவேண்டிய சிந்தனைப் புயலை இன்று அண்ணு அவர்கள் நாட்டில் உருவாக்கிவிட்டிருக்கிருர்கள். பழங்காலப் புகழின் அடிப்படையில் வரக்கூடிய எதிர்கால வாழ்வுதான் தென்னக மக்களுக்குத் தேவை. இந்த இரண்டில் எதையும் விட்டுக்கொடுத்துச் சமரசம் காண்பதற்குத் தமிழகம் இனித் தயாரில்லை.

தற்காலக் கண்ணேட்டத்தில் எதிர்கால விளைவுகளைக் கருத்திற்கொண்டு, இந்திய ஒருமைப்பாட்டை அண்ணு ஏற்றுக்கொண்டிருக்கிருர். பண்டைநாள் சிறப்புகளையும், பண்பாடு—மொழி உணர்வுகளையும் பலி கொடுப்பதாக அவர் யாருக்கும் முறிச்சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை.

இனிவரும் இலாபத்தை ஒற்றுமையில் பகிர்ந்து கொள்வோம்; சரித்திரங் கண்ட நாள்முதலாய் எங்களிடம் இருந்துவரும் கருவூலங்களில் கை வைப்பதற்கு யாரையும் அனுமதிக்க மாட்டோம். இந்திய ஒற்றுமையைப் பேணுவோம்; என்ருலும் தமிழர்களாக வாழ்ந்து கொண்டே அந்தப் பணியைக் குறைவறச் செய்வதே எங்கள் குறிக்கோள்!

இந்த முடிவுக்குக் குறுக்கே நிற்கவரும் இந்தித் திணிப்பு, எழுதப்படவிருக்கும் ஒருமைப்பாட்டுச் சரித்திரத்தை எப்படி திசைமாறச் செய்யுமோ? உண்மையான ஒருமைப்பாடு தேவையானல், இந்தித் திணிப்பைக் கைவிட வேண்டும் என்பது அண்ணு அவர்கள் உருவாக்கி வரும் வரலாற்றில் இறுதியாக எழுதப்பட்டிருக்கும் வாசகம். அவரிடம் எழுதுகோல் அசையும் வேகத்தை எதிரிலிருந்து பார்த்தவர்கள்தான் அறியமுடியும் டெல்லிப் பேரரசுக்கு அவருடைய நாவின் கூர்மையைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததே தவிர, பேனவின் துரிதத்தை உணர்வதற்கான நேரம் வாய்க்கவில்லை போலும்!

ஒருமைப்பாட்டின் உண்மையான இலக்கணம் என்னவென்பதை, இந்தியை எதிர்ப்பதின் மூலம் அண்ணு அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கிருர்கள். இமயம் முதல் குமரிவரை, பேரரசின் ஆட்சிமொழிக் கொள்கை குறித்து அண்ணு அவர்களால் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பை யாரும் இனி அலட்சியப்படுத்திவிட முடியாது. இந்தி மட்டுமே ஆட்சி மொழி—தேசிய மொழி-என்றெல்லாம் சொல்லிக்கொண்டே, இந்திய ஒற்றுமை குறித்துப் பேசுவதற்கு இனி யாருக்கும் யோக்கியதை இல்லை.

இந்தி எதிர்ப்பில் யாராலும் நடுநிலைமை வகிக்க முடியாது. அண்ணு அவர்கள் கருத்துக்கோ அதற்கு எதிரிடையாகவோதான் யாரும் இருக்கமுடியும்! எதிரிடையாக நிற்போர் தங்கள் வழி நடக்கட்டும்; பட்டம் பதவி, சொத்துச் சுகங்களிலுள்ள ஆசையின் காரணமாக ஏற்கனவே செத்துப் போய் நடமாடிக்கொண்டிருக்கும் சவங்களே அவர்கள். அத்தகையோர் பற்றி அண்ணுவுக்குக் கவலையில்லை. குடியுரிமை—பண்பாடு—மொழி—ஜனநாயகம் ஆகியவைகளை, தம்மைப் பலிகொடுத்தாவது காப்பாற்றி, எதிர்க்காலத்திடம் ஒப்படைக்கத் துணிந்திருப்பவர்கள் சார்பாகப் போரிடுவதே அவர் இலட்சியம். இதற்காகத்தான், 55 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில், பெருந்தலைவர் அண்ணு பிறந்தார். ●

7-ம் பக்கத் தொடர்ச்சி

வந்ததுமாகும். இந்த மாண்புமிக்க காட்சியைக்கண்ட காவிரிப்பூம் பட்டினத்து காரிக்கண்ணனுர் தம் களிப்பை, மக்களின் செழிப்பையும் எண்ணி,

“... ... ...

நெல்லும் நீரும் எல்லார்க்கும்
[எளியவன
வரைய சாந்தமும் திரைய
[முத்தமும்
இமிழ்குரல் முரசம் மூன்றுடன்
[ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல்
[வேந்தே.
பால்நிற உருவின் பனைக்கொடி
[யோனும்
நீல்நிற உருவின் நேமியோனும்
[என்று
இருபெருந் தெய்வமும் உடனின்
[ருஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குர
[விளங்கி
இன்னீர் ஆகலின் இனியவும்
[உளவோ
இன்னும் கேண்மின்நும் இசைவா
[ழியவே.
ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்
இருவிரும்
உடனிலை திரியீர் ஆயின்
இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயங்கெழு
[மாநிலம்
கையகப் படுவது பொய்யாகாதே
அதனல், நல்லபோலவும், நயவ
[போலவும்
தொல்லோர் சென்ற நெறிய
[போலவும்
காதல் நெஞ்சின்நும் இடைபுகற்கு
[அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி
[கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி
[வென்றுவென்று
அடுகளத்து உயர்கநும் வேலே....

(புறம். 147)

கூறியது போலவே இன்றைய தமிழகத்தைக் காப்பதிலும் தமிழைப் பேணுவதிலும் தமிழகம் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டும்; மொழிப்பிரச்னை ஒரு கட்சிக்கு மட்டுமுரியது என எண்ணுதீர்கள்; எதிர்காலச் சந்ததியினரின் மானமும் வாழ்வுமடங்கிய தீர்க்கதரிசனப் பணியாகும் என்பதை எடுத்துக்கூறி அரசியல் கருத்து மாறுபாடுகள் வேறு—மொழிப் பிரச்னை வேறு என்பதை விளக்கி அனைவரையும் அறிஞர் அண்ணு அன்பழைப்பு அழைத்ததும், அதையேற்று அரசியலில் அனுபவமிக்க எதிர்காலத்தை எடைபோடும் ஏற்றமுங்கொண்ட ஆச்சாரியார் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கு பெற்றிருப்பதும் சோழனும் பாண்டியனும் இணைந்த அன்றைய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

அன்றைய இந்தித் திணிப்பாளர் இன்று எதிர்ப்பாளரானது போல் இன்றைய தமிழ் வெறுப்பாளரான காமராசரும் நாளை விருப்பாளராவார் — ஆகும்படி செய்யும் ஆற்றல் அறிஞர் அண்ணு அவர்களுடைய தமிழுக்கு உண்டு. எனவேதான் காஞ்சி அறிஞர் காரிக்கண்ணனுர் என்று பாராட்டி போற்றி அவரது பிறந்த நாளை தமிழின் நாளாக, தமிழரின் வாழ்வாக மதித்து விழா நடத்துகிருேம் கடமை தவருத கண்ணியத்துடன்.

வாழ்க அண்ணு!

வெல்க தமிழ்!!

○

அண்ணு அவர்களுக்குப் பரிசு!

—(0)—

தமிழ்நாடு இசை நாடகக் கழகம் அரசுத் தொடர்புடைய ஓர் அமைப்பாகும். இது, ஆண்டுதோறும் ஒவ்வொரு கலைத்துறையிலும் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்துவருகிறது.

அந்தவகையில், இவ்வாண்டு, அறிஞர் அண்ணு அவர்களைச் சிறந்த திரைப்படக் கதை-வசன ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாக் கலைஞர்களுக்கும் கடந்த 18—2—62-ல் பரிசளிப்பு விழா நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. அப்போது—அண்ணு அவர்கள் சிறையிலிருந்ததால் அன்று கொடுக்க இருந்த பரிசுப் பொருள்களை இப்போது கொடுத்தார்கள்.

மேற்படி கழகச் செயலாளரான திரு. ஈ. கிருஷ்ண (ஐயர்) அவர்களும், கலைஞர் டி. கே. சண்முகம் அவர்களும் நுங்கம்பாக்கத்திலுள்ள அண்ணு அவர்களின் இல்லத்திற்குச் சென்று, பரிசுப் பொருளான தங்கச் சங்கிலியொன்றையும், தேர்வு பெற்றதற்கான அறிமுகச் சான்றிதழ் ஒன்றையும் வழங்கினர்.

அவற்றை அண்ணு அவர்கள் அன்போடு பெற்றுக் கொண்டார்கள்.

அறிஞர் அண்ணாவின் கையில் ஓர் அமுதசுரபி !

என்.வி.என்.சோமு.பி.ஏ.

அவனி மக்கள் அனைவருக்கும் பொதுவாகப் பெய்கின்ற பெருமழையின் ஒரு சிறு துளி, முத்துச்சிப்பியின் வாயில் விழுந்தால் அது முத்தாகப் பரிணமிக்கிறது !

தாமரை இலையின் மேல்பட்டால் அதுபட்ட அளவினதாகவே இருக்கிறது !

அதே மழைத்துளி காய்ந்த இரும்பின் மேல்பட்டால் சிதறி விடுகிறது.

கல்வி கற்கும் மாணவர்களில், முத்துச்சிப்பி தன்மை கொண்டோரை, தலை மாணாக்கராகவும், தாமரை இலையின் தன்மை கொண்டோரை இடை மாணாக்கராகவும், காய்ந்த இரும்பின் நிலையுடையோரை கடை மாணாக்கராகவும், சான்றோர் ஒப்பிடுவர்!

பல்கலைக் கழகங்கள் பலவற்றில் பயிலும் மாணவர்கள், இம்மூன்று தகுதிகளில், எத்தகுதியைப் பெற்றிருந்தாலும் அறிஞர் அண்ணாவின் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாயிருப்போர் முத்துச்சிப்பிகளாகவிளங்கும் தன்மை கொண்டிருக்கிறார்கள் !

மாணவர் சமுதாயத்தின் மத்தியில், அறிஞர் அண்ணா அவர்கள், வழிகாட்டும் வித்தகராக, ஒளி காட்டும் கலங்கரை விளக்கமாக, பல்லாண்டுகளாக விளங்கி வருகிறார்கள் !

இன்றைய தலைமுறையின் மாணவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைத் தங்களின் தலைவராகக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சியடைந்தாலும், அவரைத் தங்களின் ஆசானாகக் கொள்வதில்தான் பெருமிதம் அடைகிறார்கள்!

தமிழகத்தின் கல்விக்கூடங்களில் அவர் பேசாத இடமே இல்லை என்று சொல்லுமளவுக்கு, அகிலஉலகில் எந்தத் தலைவருமே பேசியிராத அளவுக்கு, அண்ணா அவர்கள் மாணவர்கள் மத்தியில் பேசியிருக்கிறார் ! .

மறுமலர்ச்சித் தூதுவர்கள் !
வருங்காலத்தின் வாரிசுகள் !
வரலாறு சமைப்பவர்கள் !
ஆற்றல் படையினர் !
அறிவுப்படையினர் !

—என்றெல்லாம், நம் நாட்டு மாணவர் சமுதாயத்தை வர்ணித்து, அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களது திறமையை மேலும் வளர்க்கும் ஒரு நல்லாசானாக அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களுக்கு விளங்கி வருகிறார் !

மாணவர்கள் மத்தியில் அறிஞர் அண்ணா அவர்களைப் போல் செல்வாக்குப் பெற்றுள்ள தலைவர்கள் தமிழகத்தில் வேறு யாருமேயில்லை.

அதற்குக் காரணம் அவரது அரசியல் நாகரிகமும், பெருந்தன்மையும்தான் !

மாணவர்களை அரசியல் கட்சிக்காரர்கள் தங்கள் கட்சியின் சுயநலத்துக்குப் பலிகொள்ளக் கூடாது என்ற கருத்தை திட்டவட்டமாக வலியுறுத்திவரும் அரசியல் தலைவர் தமிழகத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள் ஒருவர்தான் !

முன்னர் தமிழகத்தில் கல்வியமைச்சராகவிருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், சர்வ கட்சித் தலைவர்களையும் ஒன்றாகக் கூட்டி, மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக்கூடாது என்று முடிவெடுத்தார்.

உடனே அறிஞர் அண்ணா அவர்கள் தி.மா.மு.க. நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளும்படி ஆணையிட்டார்.

ஆனால் எந்த அமைச்சர் மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக் கூடாது என்று முடிவெடுத்தாரோ, அவர் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சி மட்டும், முன்போலவே ஊருக்கு ஊர் மாணவர் காங்கிரஸ் கிளைகளை ஏற்படுத்தி அதில் அமைச்சர்களும், காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

உடன் தி. மா. மு. க.வைச் சேர்ந்த மாணவர்கள் அண்ணாவைக் கண்டு இதுபற்றிக்கூற, அவர் ''நாம் இன்னும் பொறுமையாக இருப்போம்'' என்று கூறினார்.

மீண்டும் மீண்டும் மாணவர் காங்கிரசின் நடவடிக்கைகள் அதிகமாகவே, தி. மா. மு. க. தோழர்கள் அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டதில்—நாம் இப்போதும் அரசியல் நாகரிகத்தோடுதான் நடந்துகொள்ள வேண்டும், நீங்கள் மாணவர் கழகத்தை நடத்துங்கள், மாணவர் மாநாடுகளைக் கூட்டுங்கள்—ஆனால் ஒரே ஒரு நிபந்தனை, உங்கள் மாநாடுகளில் கழகத் தலைவர்கள் யாரும் கலந்துகொள்ளக் கூடாது, மாணவர்களே நடத்த வேண்டும், மாணவர்களே பேச வேண்டும், கழகத் தலைவர்களை அழைத்தால் மாணவர் கழகத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்படும்—என்ற கடுமையான நிபந்தனையோடு, மீண்டும் மாணவர் கழகத்தைத் துவக்கச் சொன்னார்கள்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய வண்ணமே, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் மாணவர் மாநாடுகளை நடத்தியது.

கழகத் தலைவர்கள் பார்வையாளர்களாக வந்திருந்தார்களே தவிர—பங்கு கொண்டு பேசவில்லை !

திருச்சியில் சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டில்கூட, ஆச்சாரியார், காயிதேமில்லத் போன்ற மற்ற கட்சித் தலைவர்களோடுதான் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டார்.

இன்றைய தினம் வளரும் மாணவர் கழகத்தைக் கண்டு, வயிற்றெரிச்சல் கொள்ளுகின்றனர் மாற்றார் !

மாணவர் சமுதாயம் அறிஞர் அண்ணாவின் கையில் இருக்கும் ஓர் அமுதசுரபியாகும் !

அது என்றும் அறிஞர் அண்ணா அவர்களிடம்தான் இருக்கும்!

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியை வைத்துக் கொண்டு, பாமர மக்களின் வயிற்றுப் பசியைப் போக்கினாள் மணிமேகலை என்ற ஒப்பற்ற தமிழ்க் காப்பியத்தின் உயரிய தலைவி !

அறிஞர் அண்ணா அவர்களிடம் இருக்கும் மாணவர் கழகம் என்ற அமுதசுரபியில் இருந்து, எடுக்கப்பட்ட ஆற்றல் படைத்த பலர், இன்றைய தினம் நாட்டு நலன் காக்கும் பணியில் ஈடுபட்டு புகழ் பெற்று விளங்குகிறார்கள்!

தமிழகத்தின் ஆற்றல்மிகு பேச்சாளர்களாக, செயலாற்றும் செம்மல்களாக விளங்கும் பலரும் அறிஞர் அண்ணாவின் கைவழி வந்தவர்களேயாகும் !

பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்ப்பதைப்போல், அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர் சமுதாயத்தை வழி நடத்திச் செல்கிறார் !

அறிஞர் அண்ணாவிடம் இருந்து ஓயாமல், சிந்தனைக் கருத்துக்களைக் கற்றுத் தெளிவடையும் மாணவர்கள், தங்கள் ஆசானின் பிறந்தநாளில், வாழ்த்துக்களைத் தெரிவிப்பது என்பது முறையல்ல ஆதலால், அவரை ஆயிரம் முறை வணங்குகிறார்கள், தங்கள் நன்றியையும் வழங்குகிறார்கள் !

○

தி. மா. மு. க. கிளைக் கழக அமைப்பு அறிக்கை

மாணவத் தோழர்களே,

வணக்கம். நாடெங்குமுள்ள திராவிட மாணவர் கழகங்களை உடனடியாக தலைமைக் கழகத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். கிளைக்கழகம் இல்லாத கல்வி நிலையங்களில் புதிய கிளைக்கழகங்களை நிறுவ வேண்டுகிறேன்.

1-10-1964-க்குள் தலைமைக் கழகத்துடன் முறைப்படி பதிவு செய்துகொண்ட கிளைக்கழகங்கள் மட்டும் கழக நிர்வாகிகள் தேர்தலில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்களாவார்கள். பதிவு செய்துகொள்ள உறுப்பினர் பாரம் தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அமைப்பு முறைகள்

1. கலைக்கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள், தொழிற்பயிற்சி பள்ளிகள் ஆகியவைகள் தனித்தனிக் கிளைக்கழகங்கள் அமைக்க உரிமையுண்டு.
2. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பள்ளிக்கொரு கிளைக் கழகம் அமைக்காது, ஊருக்கொரு கிளைக்கழகம் அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஒரு ஊரில் உள்ள பல்வேறு உயர்நிலைப்பள்ளிகளின் மாணவர்கள் ஒன்றுகூடி ஒரு கிளைக் கழகம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நகரசபைகளில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் அனுமதி வழங்கியபிறகு அமைக்க உரிமை உண்டு.
3. ஒவ்வொரு கிளைக் கழகங்களும் செயலாளர், பொருளாளர், துணைச்செயலாளர், பதினைந்து பேருக்கு மேற்படாத செயற்குழுவினர் ஆகியோரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்
''தென்னகம்''
சென்னை-6.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1